Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :199 ஆனி 01ஆம் நாள் திங்கட்கிழமை 15 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

# கோத்தாவின் கண்காணிப்பிலேயே வடக்கு, கிழக்கு இருக்க வேண்டும்

## வடக்கிலும் விசேட செயலணியை நிறுவ கோருகின்றனர் சிங்கள கடும்போக்காளர்கள்

கொழும்பு, ஜூன் 15

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று கடும்போக்குவாத சிங்களப் பிரமுகர்கள் வலியுறுத்தியுள்ளனர். கிழக்கைப்போன்று தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் வடக்கிலும் ஜனாதிபதி விசேட செயலணியை நிறுவ வேண்டும் எனவும் அவர்கள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். இது தாமதமின்றி நிறுவப்பட வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். 13

## 10 வயது சிறுமி துஷ்பிரயோகம்

### 42 வயதுடையவர் சந்தேகத்தில் கைது

வவுனியா, ஜூன் 15

வவுனியா, செட்டிகுளம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட வீரபுரம் பகுதியில் 10 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் 13

## யாழில் காச நோயாளர்கள் 20பேர் வரை சமூகத்தினுள்

### மருத்துவர் யமுனானந்தா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தில் கொரோனா அச்சம் குறைந்துவரும் நிலையில் காச நோய் பரவல் தொடர்பான அச்சம் அதிகரித்துள்ளது. காச நோயாளர்கள் 90 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மேலும் 20 நோயாளர்கள் சமூகத்துடன் இணைந்துள்ளார்கள். இவ்வாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா எச்சரிக்கை விடுத்துள்ளார். 13

## வீட்டுக்குள் புகுந்து வாள்வெட்டு பெண்கள் உட்பட ஐவருக்கு காயம்

வவுனியா, ஜூன் 15

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் நேற்று இரவு 7.30 மணியளவில் வீடு புகுந்து இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஐந்து பேர் காயமடைந்து வவுனியா மருத்துவமனை 13

## விடத்தற்பளையில் கொரோனாத் தொற்று

யாழ்ப்பாணம், ஜூன் 15

தென்மராட்சி கொடிகாமம் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

20 பேருக்கான பரிசோதனைகள் யாழ். போதனா மருத்துவமனை 13

வடமராட்சியில் கடலட்டை பிடிப்பில்

## நீதிமன்ற உத்தரவால் வெளியேறிய நிறுவனங்களே மீண்டும் ஆக்கிரமிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தின் வடமராட்சி பிரதேசத்தில் தற்போது கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், 2018ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவின் மூலம் வெளியேற்றப்பட்டவை என்பது தெரியவந்துள்ளது.

வடமராட்சியைச் சேர்ந்த உள்ளூர் மீனவ சங் 13

## கடலட்டை பிடிப்புக்கு அனுமதி: அதற்கெதிராக இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடற்றொழில் நீரியல்வளத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஆளுகைக்கு உட்பட்ட திணைக்களத்தால் வடமராட்சி கிழக்கில் வழங்கப்பட்ட கடலட்டை பிடிப்புக்கான அனுமதியை உடனடியாக இரத்துச் செய்யக் கோரி இன்று மாபெரும் 13

## கடும் காற்றால் தூக்கி வீசப்பட்டவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

கடும் காற்றால் மோட்டார் சைக்கிளிலிருந்து கோப்பாய் பாலத்துக்கு அருகில் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

கோப்பாய் தெற்கு கோப்பாயைச் சேர்ந்த 80 வயதான சந்திரசேகர் சரவணமுத்து என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 12ஆம் திகதி எழுதுமட்டுவாழ் நோக்கி மகனுடன் மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் 13

## கண்டாவளை படை முகாம் முன்பாக வெடிபொருள் மீட்பு



கிளிநொச்சி, ஜூன் 15

பரந்தன் - முல்லை வீதியில் கண்டாவளை இராணுவ முகாம் முன்பாகக் காணப்பட்ட வெடிபொருள் பாதுகாப்பாக செயலிழக்கம் செய்யப்பட்டது.

இராணுவ முகாம் முன்பாக பிரதான வீதியில் மர்மப் பொதி இருப்பதைப் படையினர் அவதானித்தனர். இதனையடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது. மர்மப் பொதி என்னவாக இருக்கும் என்று விசாரணைகள், ஆராய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. அது வெடிபொருள் என்று கண்டறியப்பட்ட பின்னர் அதனை வெடிக்க வைப்பதற்கான முயற்சிகள் பாது 13



## யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஒத்திகை

யாழ்ப்பாணம், ஜூன் 15

கொரோனாத் தொற்றுக் காரணமாக நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு ஒத்திகை நேற்று நடைபெற்றது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய 13

## வாள்வெட்டுக்காரர் 7 பேர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களிலும் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 7 சந்தேகநபர்களை நாவற்குழிப் பகுதியில் வைத்து சாவகச்சேரி பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கைது 13

## ரயில் நிலையத்தில் குழப்பதாரிகள் கைது

வவுனியா, ஜூன் 15

வவுனியா ரயில் நிலையத்தில் நேற்று மாலை குழப்பம் விளைவித்தார்கள் என்ற சந்தேகத்தில் இருவரை வவுனியாப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.


ரயில் நிலையத்துக்கு வருகை தந்த இருவர் நிலைய அதிபரு 13

## ஆர்.பி.ஜி. ஷெல்கள் வவுனியாவில் மீட்பு

வவுனியா, ஜூன் 15

வவுனியா ஓமந்தை நாவற்குளம் பகுதியில் வீட்டுக் கிணற்றிலிருந்து வெடிபொருள்களை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர்.

நீண்டகாலத்தின் பின்னர் வீட்டின் உரிமையாளர் கிணற்றைத் துப்புரவு செய்துள்ளார். கிணற்றில் சந்தேகத்துக்கிடமான பொருள்கள் 13



## டோனியின் சுயசரிதை பட கதாநாயகன் தற்கொலை

கொழும்பு, ஜுன் 15
பிரபல ஹிந்தி திரைப்பட நடிகர் சுஷாந்த் சிங் ராஜ்புத் தற்கொலை செய்து கொண்டார். 34 வயதான அவர் மும்பை பந்த்ராவில் உள்ள தனது வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஹிந்தியில் பல்வேறு வெற்றிப் படங்களை கொடுத்துள்ள இவர், இந்திய அணியின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் எம்.எஸ்.டோனியின் சுயசரிதை படத்தில் நடித்திருந்தார்.
நடிகரின் தற்கொலை செய்தி இந்தியத் திரையுலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
சில நாள்களுக்கு முன்பு சுஷாந்தின் முன்னாள் மேலாளரான திஷா சேலியன் என்பவர் தற்கொலை செய்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

# அரசமைப்புத் திருத்தத்தின் ஊடாக தீர்வு காணமுடியாது

### அரச தரப்பு தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 15**
**தமிழ், முஸ்லிம் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டியது அவசியம். அது அரசின் பொறுப்பாகும். அரசமைப்புத் திருத்தம் ஊடாகத்தான் தீர்வுகாண முடியும் என்பது பொருத்தமற்றது. அரசமைப்புத் திருத்தம் ஊடாக ஒரு தரப்பினருக்கு தீர்வு வழங்கும்போது பிறிதொரு தரப்பினர் பாதிக்கப்படுவார்கள். இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புரிந்து கொள்ளவேண்டும். இவ்வாறு அரச தரப்பைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.**

தமிழ் மக்களின் தீர்வு முயற்சிக்கான புதிய அரசமைப்புத் திருத்தத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோத்தாபய அரசுக்கு ஆதரவு வழங்கும் என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் அண்மையில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, லக்ஸ்மன் யாப்பா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் அரசமைப்பில் திருத்தம் கொண்டு வந்தால் அரசுக்கு ஆதரவு வழங்குவதாக கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களை குறிப்பிடுகிறார்கள். நல்லாட்சி அரசைத் தீர்மானிக்கும் ஒரு பலமான சக்தியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கட்சி பதவி வகித்தது. எதிர்க்கட்சி பதவியிலிருந்து கொண்டு கூட்டமைப்பினர் வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகள் குறித்து எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.
நாட்டைப் பிளவுபடுத்தும் வகையில் சமஷ்டியாட்சியின் கொள்கைகளை உள்ளடக்கிய அரசமைப்பை உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தினார்கள். மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்காளி கட்சியாகவும் செயற்பட்டார்கள். பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதற்கு நல்லாட்சி அரசில் எதிர்தரப்பினராக செயற்பட்ட நாங்கள் ஒருபோதும் தடைகளை ஏற்படுத்தவில்லை.
அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதாக குறிப்பிட்டுக் கொண்டு நாட்டை பிளவுபடுத்தும் செயற்பாடுகளுக்கே கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினோம்.
பொருளாதார ரீதியில் பார்திக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றப்பட வேண்டும். பொருளாதார சமத்துவம் காணப்படும் போது இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறாது. சமஷ்டியாட்சியின் கொள்கைகளை உள்ளடக்காத விதத்தில் நிச்சயம் தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும், என்றார். (ஒ,5)

## வாய்த் தர்க்கம் மோதலில் முடிவு

### புதுக்குடியிருப்பில் ஒருவருக்குக் காயம்

முல்லைத்தீவு, ஜுன் 15
புதுக்குடியிருப்பு கைவேலிப்பகுதியில் கால்நடை உரிமையாளருக்கும், வயல் செய்கையாளருக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் கைகலப்பாக மாறியது. இதில் கால்நடை உரிமையாளர் தாக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
தாக்குதலுக்கு இலக்கான கால்நடை உரிமையாளரின் மாடு கடந்த 12ஆம் திகதி கைவேலிப் பகுதியிலுள்ள விவசாயக் காணிக்குள் புகுந்துள்ளது. மாட்டை காணி உரிமையாளர் பிடித்துக் கட்டியுள்ளார். மாட்டின் உரிமையாளர் அதனை விடுவிக்குமாறு கோரியுள்ளார். மாடு நெற்பயிரை மேய்ந்துள்ளது என்று காணி உரிமையாளர் பதிலளித்துள்ளார். மாட்டினால் ஏற்பட்ட சேதத்துக்குரிய மதிப்பீடு விவசாயப் போதனாசிரியரால் மேற்கொள்ளப்பட்டதும் அதற்குரிய தண்டப் பணத்தைச் செலுத்துவதாக உரிமையாளர் கூறியுள்ளார். மாடு இல்லாமல் கன்று கத்திக் கொண்டிருப்பதால் அதனை உடனடியாக விடுவிக்குமாறு அவர் கேட்டுள்ளார்.
அதற்கு காணி உரிமையாளர் மறுப்புத் தெரிவித்த நிலையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளது. பின்னர் கைகலப்பாக மாறியுள்ளது. மாட்டின் உரிமையாளர் முகத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அவர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்ததுடன் முல்லைத் தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ,5,19)

## ஹெரோய்னுடன் இருவர் கைதாம்

நெல்லியடி நகர்ப் பகுதியில் 46 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் 26 மற்றும் 28 வயதுடைய இரு இளைஞர்களை நேற்று மதியம் கைது செய்துள்ளதாக காங்கேசந்துறை சிறப்புக் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இருவரும் நெல்லியடி பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். (ஒ,5,26)

## தேர்தல் பரப்புரை வியூகம் மக்கள் முன்னணியும் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜுன் 15
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் இளங்கலைஞர் மண்டபத்தில் நேற்றுப் பிற்பகல் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இடம்பெற்றது.
நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும் அதற்கான பரப்புரைகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.
கலந்துரையாடலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடும் 10 வேட்பாளர்கள், கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். (ஒ,5,20)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜுன் 15
கஞ்சாப் போதைப் பொருளுடன் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நபர் ஒருவரை நாவற்குழியில் வைத்து சந்தேகத்தில் கைது செய்துள்ளதாக, யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஒ,5,159)

# வாகனத்தில் வேட்பாளரின் ஒளிப்படமிருந்தால் சிக்கல்

கொழும்பு, ஜுன் 15
பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஒளிப்படம், சின்னம் மற்றும் இலக்கங்கள் காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதால் இவற்றை முன்வைத்து பரப்புரைகளை முன்னெடுக்கும் வாகனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
சட்டவிரோத தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்கும் வாகனங்களுக்கு எதிராக தேர்தல் சட்டம் மற்றும் மோட்டார் வாகன சட்டம் ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.
இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ள பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன, இவ்வாறான சட்ட விரோத பரப்புரைகள் முன்னெடுக்கப்படும் போது அவற்றுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.
ஏதாவது வாகனமொன்றில் வேட்பாளரின் ஒளிப்படத்தையோ, சின்னத்தையோ அல்லது இலக்கத்தையோ அச்சிட்டிருந்தால் அதற்கு எதிராக தேர்தல் சட்டத்திட்டத்துக்கு அமைவாக மாத்திரமின்றி மோட்டார் வாகன சட்டத்தின் கீழும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட் டுள்ளது. (ஒ.5)

# கிளி. கண்டாவளையில் பெரும் மணல் அகழ்வு!

## களத்தில் குதித்த கிராம அலுவலர்கள்
## பிரதேச செயலருக்கு அறிக்கை



கிளிநொச்சி, ஜூன் 15

**கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் தொடரும் மண் அகழ்வு தொடர்பில் அந்தப் பிரதேசத்துக்குட்பட்ட கிராம அலுவலர்களால் பிரதேச செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

கடந்த சில நாள்களுக்கு முன்னர் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் இரணைமடுக்குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றுப் படுக்கையில் மேற்கொள்ளப்பட்டு வந்த சட்டவிரோத மணல் அகழ்வினால் இயற்கை வளம் முறையற்ற வகையில் அழிக்கப்படுவது தொடர்பில் கிராம அலுவலர்களால் பிரதேச செயலாளருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதையடுத்து பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக குறித்த பகுதி கிளிநொச்சி விசேட பொலிஸ் குழுவால் முற்றுகையிடப்பட்டிருந்தது. அந்தப் பகுதியை கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் நேரில் சென்று பார்வையிட்டிருந்தார். அவருடன் கண்டாவளைப் பிரதேச செயலர் கிராம அலுவலர் உள்ளிட்ட பலரும் சென்றிருந்தனர்.

இவ்வாறு பெரிய இயற்கை வளச் சுரண்டல் இடம்பெற்று வருகின்றமை தொடர்பில் கள ஆய்வு மேற்கொள்ளுமாறு பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டதை அடுத்து பிரதேச செயலாளரினால் கிராம அலுவலர்களிடம் அறிக்கை கோரப்பட்டிருந்தது. அதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை குறித்த பகுதியில் ஆங்காங்கே விற்பனைக்குத் தயார் நிலையில் இருந்த 200 டிராக்டர் லோட்டுக்கு அதிகளவான மணல் மேடுகள் அடையாளம் காணப்பட்டன.

குறித்த மணல் திட்டிகள் தனியார் காணிகளிலும், பொது இடங்களிலும் விற்பனைக்குத் தயாரான நிலையில் குவிக்கப்பட்டிருப்பது தொடர்பில் பிரதேசத்துக்குப் பொறுப்பான கிராம அலுவலர்களால் அறிக்கை தயாரிக்கப்பட்டு கண்டாவளைப் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், மேற்கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் மாவட்ட செயலகத்தினாலும், பிரதேச செயலகத்தினாலும் விரைவு படுத்தப்பட்டுள்ளது.

கண்டாவளை, புளியம்பொக்கணைப்பகுதிகளில் இவ்வாறு குவிக்கப்பட்டுள்ள மணல் கும்பிகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக கண்டாவளை பிரதேச செயலர் த.பிருந்தாகரன் தெரிவித்தார். (ப-6)

# தொழிற்தகமைப் பாடநெறிக்கு மாணவர் விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூன் 15

உயர்தரத்தின் தேசிய தொழிற்தகைமை பாடநெறியின் கீழ் தரம் 12க்கு மாணவர்களை உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் அனைத்து வலயக்கல்விப் பணிமனைகளை உள்ளடக்கும் வகையில் 423 பாடசாலைகளில் மாணவர்கள் உள்ளீர்க்கப்படவுள்ளனர். சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்களும் இதன்மூலம் நன்மையடைய முடியும்.

தகுந்த பாடசாலையைத் தெரிவுசெய்வதற்கான சந்தர்ப்பமும் மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநெறியின் கீழ் உடற்கல்வி மற்றும் விளையாட்டு, கைவினை கலை, உள்ளக வடிவமைப்பு, அரங்கற்கலை, குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு, பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தி தொழில்நுட்பக் கல்வி மற்றும் கிராபிக் வடிவமைப்பு உள்ளிட்ட 26 பாடநெறிகள் அடங்குகின்றன.

இது குறித்த மேலதிக தகவல்களை 011 2787136 அல்லது 011 2786746 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து பெற்றுக்கொள்ளமுடியும். www.moe.gov.lk எனும் கல்வி அமைச்சின் இணையத்தள முகவரிக்குப் பிரவேசித்தும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஏ)

# ஏ/எல் பரீட்சையை பிற்போடவேண்டும்

## ரவி கருணாநாயக்க கோரிக்கை



கொழும்பு, ஜூன் 15

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை அரசு பிற்போடவேண்டும் என்று முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்தப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்தப்படுவதற்கு மீள் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. பாடவிதானங்கள் நிறைவுசெய்யப்படாத நிலையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதில் மாணவர்களுக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அதனால் உயர்தரப் பரீட்சைகளை நவம்பர் அல்லது டிசெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கவேண்டும்- என்றார்.

அதேவேளை அனைத்து பல்கலைக்கழகங்களும் இறுதியாண்டு பரீட்சைகளுக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி மீள்திறக்கப்படவுள்ளன. பரீட்சைகள் ஓகஸ்ட் 15ஆம் திகதிக்கு முன்னர் நடத்தி முடிக்கப்பட வேண்டும் என்று உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ஏ)

# கொவிட் நிதியத்துக்காக ஆசிரியர்களின் சம்பளம்

## *உயர் நீதிமன்றில் வழக்கு*

மட்டக்களப்பு, ஜூன் 15

கிழக்கு மாகாண அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் சம்பளத்தைப் பிடித்தமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் இலங்கை ஆசிரியர் சங்கம் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளைச் செயலாளர் பொ.உதயரூபன் தெரிவித்துள்ளதாவது:

கிழக்கு மாகாணத்தில் கொவிட் 19 நிதியத்துக்கு அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் அனுமதியின்றி சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட தொகை கழிக்கப்பட்டமை அவர்களின் அடிப்படை உரிமை மீறும் செயலாகும். அதனை எதிர்த்து இலங்கை ஆசிரியர் சங்கம் உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது.

கடந்த மே மாதம் சம்பளப் பட்டியலிலிருந்து கிழக்கு மாகாணத்திலுள்ள அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒரு நாள் சம்பளத்தின் குறிப்பிட்ட தொகை பிடிக்கப்பட்டிருப்பதோடு, மூடப்பட்டிருந்த பாடசாலைகள் சுகாதார விதிமுறைகளுக்கு முரணாக சில வலயக் கல்விப் பணிப்பாளர்களின் அறிவுறுத்தலுக்கமைய திறக்கப்பட்டு விருப்பமின்றி அனுமதி பெறப்பட்டுள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனால் இலங்கை ஆசிரியர் சங்கம் அடிப்படை உரிமைமீறல் வழக்கொன்றை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கில் கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், மாகாண கல்விச் செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்ணாண்டோ, பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை செயலாளர் பொ.உதயரூபன் ஆகியோர் மனுதாரர்களாக குறிப்பிடப்பட்டுள்ளனர்- என்றார். (க-47)

# 150 இராணுவத்தினர் குருதித்தானம்



மன்னார், ஜூன் 15

நாட்டில் உள்ள குருதி வங்கிகளில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில், மன்னார் தள்ளாடி 54ஆவது இராணுவ படைப்பிரிவின் ஏற்பாட்டில், தள்ளாடி படை முகாமில் குருதித்தான முகாம் நேற்று நடத்தப்பட்டது.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் கோரிக்கைக்கு அமைவாக மன்னார் தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஏ.ஏ. ஐ.ஜே.பண்டாரவின் பணிப்புரைக்கு அமைவாக குருதித்தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

அநுராதபுரம் போதனா மருத்துவமனை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் வருகையுடன் குருதி சேகரிக்கப்பட்டது. சுமார் 150 இராணுவத்தினர் குருதித்தானம் செய்தனர். (க-56)



# மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் இரண்டு விமானங்கள் தரையிறங்கின!

கொழும்பு, ஜூன் 15

கொரோனா வைரஸ் பரவலையடுத்து சுமார் மூன்று மாதகாலமாக மூடப்பட்டிருந்த மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் இரண்டு விமானங்கள் தரையிறங்கியுள்ளன.

தென்னாபிரிக்காவில் இருந்து வந்த விமானமொன்று கடந்த வெள்ளிக்கிழமையும், அஸர்பையானில் இருந்து புறப்பட்ட விமானமொன்று நேற்று சனிக்கிழமையும் மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் தரையிறங்கியுள்ளன.

கொரோனா நெருக்கடியால் சுமார் 3 மாதங்கள் குறித்த விமான நிலையம் மூடப்பட்டிருந்த நிலையில் மேற்படி விமானங்கள் தரையிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்த சில திட்டங்கள்

## விண்ணப்பிக்க கோருகின்றது வடக்கு விவசாய அமைச்சு

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கு மாகாணத்திலுள்ள விவசாய வியாபார தொழில் முயற்சியாளர்களின் தொழில் முயற்சிகளை வலுப்படுத்தும் முகமாக அவர்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்தும் முகமாக சிறிய நடுத்தர மற்றும் பெரிய விவசாயத்துறைகளை இனங்கண்டு அவர்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

பெருந்தோட்டக் கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதி அமைச்சின் விவசாய நவீன மயப்படுத்தல் திட்டத்தின் கீழ் இது செயற்படுத்தப்படுகின்றது என்று வடக்கு மாகாண அமைச்சின் செயலர் அ.சிவபால சுந்தரன் தெரிவித்தார்.


இதுபற்றி அவர் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சிறிய தொழில் முயற்சிகளுக்கு முதலீட்டின் ஐம்பது வீதத்தை அரசிடமிருந்து மானியமாகப் பெற முடியும். பெரிய தொழில் முயற்சியாளர்களுக்கு 100 மில்லியன் ரூபா வரையான நிதியை அரசிடமிருந்து தொழில் முயற்சிக்குரிய மானியமாகப் பெறமுடியும்.

உதவித் திட்டம் வழங்கக்கூடிய தொழில் முயற்சிகளாவன,

1. வாசனைத் திரவிய உயர் பெறுமதி சேர்ப்புகள்
2. விவசாயக் கழிவுகளுக்கான தீர்வுகள்.
3. பழங்கள் மற்றும் மரக்கறிகளை பதனிடல்.
4. விவசாய சக்தி தீர்வுகள்.
5. விவசாய உற்பத்தி அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம்.
6. உணவு மற்றும் மதுசாரம் அல்லாத குடிபானங்கள்.
7. தேங்காய் மற்றும் தும்பு பதனிடல் மேம்படுத்தல்கள்.
8. பூச்செய்கை பெறுமதி சேர்ப்புகள்.
9. கால்நடை மற்றும் பண்ணை உற்பத்திகளுக்கான உயர்பெறுமதி சேர்ப்புகள்.
10. தேயிலை உயர்பெறுமதி சேர்ப்புகள்.
11. காலநிலை நட்பு விவசாயம் மற்றும் புதிய விவசாயத் தொழில் நுட்பம்
12. வாசனைப் பொருள் மற்றும் மருந்து மூலிகை உயர் பெறுமதி சேர்ப்புகள்.
13. விவசாயப் பொருள்களுக்கான உள்ளக மற்றும் வெளியக வசதி வாய்ப்புகள் மற்றும் பொதியிடல் தீர்வுகள்.

இந்த விடயங்கள் தொடர்பான செயலமர்வுக் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்படவுள்ளதால் ஆர்வமுள்ள தொழில் முயற்சியாளர்கள் தங்கள் தொழில் முயற்சி தொடர்பான விவரங்களை வடக்கு மாகரண விவசாய அமைச்சில் விண்ணப்பப்படிவங்களை நேரடியாகவோ மின்னஞ்சல் மூலமாகவோ இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலதிக தொடர்புகளுக்கு அமைச்சின் உதவித்திட்டமிடல் பணிப்பாளரின் 0212217357 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த)



# ரூ.8 லட்சம் பெறுமதியான முதிரைக் குற்றிகள் மீட்பு

## சாரதி வாகனத்தைவிட்டு ஓட்டம்

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி பூநகரி வெட்டுக்காடு பகுதியில் முதிரைக் குற்றிகளுடன் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக காடுகளை அழித்து முதிரைக்குற்றிகள் கடத்தப்படுகின்றன என்று கிடைத்த தகவலுக்கமைய பூநகரி பொலிஸாரும் புலனாய்வுத்துறையினரும் சம்பவ இடத்துக்கு விரைந்தபொழுது பரமங்கிராய் பகுதியில் முதிரைக் குற்றிகளை ஏற்றிவந்த வாகனத்தை வழிமறித்தனர்.

இதன்போது சாரதி வாகனத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார். கைப்பற்றப்பட்ட முதிரைக் குற்றிகள் 8 இலட்சம் ரூபா பெறுமதியானவை என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-6,35)

# வீதியில் சென்றவரை வழிமறித்து தாக்குதல்

கொடிகாமம், ஜூன் 15

கெற்பேலி மத்தியில் நடத்தப்பட்ட தாக்குதலில் இளைஞர் படுகாயமடைந்து சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ரவிச்சந்திரன் செந்துஜன் (வயது 20) என்பவரே காயமடைந்தார்.

பாலாவியிலிருந்து வந்த இருவர் கெற்பேலி மத்தி மைதானத்துக்கு அருகாமையில் கசிப்பு அருந்தினர் என்றும் அந்தவழியேசென்ற இளைஞரை கசிப்பு அருந்துவதற்காக அழைத்தபோது அவர் மறுத்ததால் தாக்கினர் என்றும் கூறப்பட்டது.

இது பற்றி கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விசாரணை நடக்கின்றது என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (த-159)



# உதவும் கரங்களின் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஜூன் 15

கீரிமலை உதவும் கரங்கள் செயற்றிட்டத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட முதலாவது குருதிக்கொடை முகாம் கீரிமலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

51குருதிக் கொடையாளர்கள் இதில் கலந்துகொண்டு உயிர்காக்கும் உன்னத பணியில் பங்காளர்களாக கலந்துகொண்டனர். (த-114)

# முச்சக்கரவண்டிகளுக்கென கரவெட்டியில் நடைமுறைகள்

கரணவாய், ஜூன் 15

நெல்லியடி நகரிலும் கரவெட்டி பிரதேச சபை எல்லைக்குள்ளும் சேவையில் ஈடுபடும் முச்சக்கரவண்டிகள் தொடர்பில் சில ஒழுங்குபடுத்தல்களை நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர். ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

நெல்லியடி பொலிஸாருடன் இணைந்து குறித்த நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. பொதுமக்களின் கருத்துக்கள் வரவேற்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1. கொடிகாம வீதி மற்றும் பேருந்து தரிப்பிடத்தைச் சுற்றி முச்சக்கர வண்டிகள் தரித்தலை தடைசெய்தல்.
2. புதிதாக ஏற்படுத்தப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்துக்கு மாற்றுதல். (பஸ் தரிப்பிடத்துக்கு அருகில்)
3. பதிவு எண் வழங்குதல்.
4. சித்திரை மாதம் தொடங்கி கட்டண மானி மீற்றர் கட்டாயமாக பொருத்தப்பட்டு கட்டணம் அறவிடப்படும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.
5. முச்சக்கர வண்டி தொடர்பில் தகுதிச் சான்றிதழ் நடைமுறைப்படுத்தல்.
6. உபவிதி மற்றும் யாப்பு ஒன்றை தயாரித்து முக்சக்கரவண்டிச் சங்கத்தை பதிவுசெய்ய உதவுதல்.
7. முச்சக்கரவண்டி நடத்துதல் தொடர்பான ஒழுக்கம் தொடர்பில் தனி நபர்/ ஓட்டுநர் ஒழுக்ககோவை ஒன்றைத் தயாரித்தல்.

ஆகிய தீர்மாணங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



# மக்களின் காணி அபகரிப்பு: சட்டநடவடிக்கைக்கு தயார்

## மணிவண்ணன் மக்களிடம் உறுதி

பூநகரி கிராஞ்சி மொட்டையன் குளம் கிராமத்தில் மக்களுக்குரிய காணியை வனவள திணைக்களம் எல்லையிட்டு அடையாளப்படுத்தி பொது மக்களை காணிக்குள் செல்லவிடாது தடுத்ததால் அங்கு நேற்றுமுன்தினம் மக்கள் மத்தியில் குழப்பநிலை ஏற்பட்டது.

பொது மக்கள் சிலருக்கு எதிராக வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து பொதுமக்களின் அழைப்பை ஏற்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் சம்பவ இடத்துக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் பாதிப்புகளை கேட்டறிந்து உரிய சட்ட நடவடிக்கைகளை தான் மேற்கொள்கின்றேன் என்றும் அவர் மக்களுக்கு வாக்குறுதி வழங்கினார். (த-20)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## உருமறைக்கப்பட்ட ஆபத்து

கிரேகத்துக்கும், ட்ரோய் நாட்டுக்கும் இடையில் பெரும் சமர். கிரேக்கர்கள் எவ்வளவு முயன்றும் ட்ரோய் கோட்டைக்குள் உட்புக முடியவில்லை. ஒரு கட்டத்தில் கிரேக்க வீரர்கள் திரும்பிச் செல்ல முடிவெடுத்தனர். அப்போது ஒரு பிரமாண்டமான மரக்குதிரையை அவர்கள் விட்டுச் சென்றனர். அந்தக் குதிரையைக் கோட்டைக்குள் இழுத்துச் சென்றுவைத்தால், எத்தினா என்ற தெய்வம் மகிழும் என தவறாக வழிநடத்தப்பட்டான் ட்ரோய் மன்னன். மரக்குதிரை கோட்டைக்குள் இழுத்துவரப்பட்டது. அன்று நள்ளிரவு குதிரையின் இரகசியக் கதவுகளைத் திறந்து பாய்ந்து வந்த கிரேக்க வீரர்கள் கோட்டையைக் கைப்பற்றி, வீழ்த்த முடியாத ட்ரோய் அரசை மீண்டெழாதபடி செய்தனர்.

இப்படி ஆபத்தை உருமறைப்புச் செய்து தம் எதிராளிகளை நயவஞ்சக வலைக்குள் விழவைப்பதென்பது அதிகாரமுடைய எல்லாத் தரப்பினரும் விரும்பித் தேர்வு செய்யும் உத்திதான். இலங்கையின் பேரினவாதிகளும் இவ்வாறு உருமறைக்கப்பட்ட ஆபத்தை சிறுபான்மையினர் மீது அடிக்கடி ஏவிக்கொண்டேதான் இருக்கிறார்கள். குறிப்பாக தமிழர்களின் பூர்வீக நிலங்களை விழுங்குவதற்கும், தமிழர்கள் இலங்கையின் ஆதிக்குடிகள் என்ற வரலாற்றுச் சான்றுகளை அழித்து சிங்களவர்களே இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்பதை நிறுவுவதற்கும் பல நூற்றாண்டுகளாகவே சிங்கள அரசுகள் முயன்றுகொண்டே தான் இருக்கின்றன.

கல்லோயா, மகாவலி என்று நதிகளின் அபிவிருத்தியைச் சாக்காகக் கொண்டு, நதி நடந்த வழியெங்கும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டன. அதனால் தான் பெரும்பான்மையான தமிழர்கள் வாழ்ந்த, தமிழர்களின் தொன்மையான அரசுகள் ஆட்சிபுரிந்த, திருகோணமலை ஒரு சிங்கள மாவட்டமாக மாற்றமடைந்து, தமிழர்கள் அங்கு இரண்டாம் தரக் குடிகளாகிவிட்டனர். அதைவிட புத்தரின் பெயரால், புதிய விகாரைகளை அமைத்து, அவற்றுக்கு மகாவம்சத்தில் இடைச்செருகப்பட்ட புனைவொன்றை ஆதாரம் போல காண்பித்து, தமிழர்களின் ஏனைய பகுதிகளையும் இன்னொரு பக்கத்தால் சிங்கள அரசு உரிமை கொண்டாடும் வேலைகளில் போர் முடிந்த கையோடு இறங்கிவிட்டது.

இப்போது கொரோனா, தேர்தல் என்ற சந்தடிக்குள் சத்தமிடாமல் தொல்பொருள்களைப் பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி ஒன்று கிழக்கு மாகாணத்துக்கெனத் தனித்துவமாக நிறுவப்பட்டுள்ளது. கொரோனா அச்சத்தால் நாடு இரண்டும் கெட்டான் நிலையில் இருக்கும் போது, ஏன் அவசரத்தனமாக கிழக்குத் தொல்பொருள்களைப் பாதுகாக்க ஒரு செயலணி என்ற கேள்வி எல்லோருக்குமே எழும். இப்போது அமைத்தால் தான் அதற்கு எவ்வித எதிர்ப்பும் எழாது. எழுந்தாலும் கொரோனா நடைமுறைகளை வைத்து அந்த எதிர்ப்புக் குரல்களையும் தனிமைப்படுத்தி விடலாம். காலப் போக்கில் இந்தத் தொல்பொருள்களைப் பாதுகாக்கும் செயலணி கிழக்கின் எல்லா இடங்களிலும் நீக்கமற பௌத்த சின்னங்களை தொல்பொருளில் கண்டுபிடித்ததாக கதையளக்கும். அங்கெல்லாம் பௌத்தக் கொடியும், விகாரையும், பின்னே சிங்களக் குடியேற்றங்களும் சட்டபூர்வமாக நிகழும். முற்றுமுழுதாக கிழக்கு மாகாணம் சிங்களமயப்படும்.

இந்தத் திட்டத்தை தமிழர்தரப்பு அறிந்து கொண்டதால் அரசியல்மட்டத்திலான எதிர்ப்புகள் கிளம்பியபோதும், அவை மெல்லியமுனகலாக மட்டுமே அமைந்ததால், அரசு தன்னிஷ்டப்படி ஆடத்தொடங்கிவிட்டது. கிழக்கைப் போலவே விரைவில் வடக்கிலும் தொல்பொருள்களைப் பாதுகாக்க இன்னொரு செயலணி அமைக்கப்படவிருப்பதாக தகவல்கள் அடிபடுகின்றன. ஆக, கிழக்கை விழுங்கிய பின்னர் வடக்கையும் ஏப்பம் விட கோத்தா அரசு தயாராகின்றது. இதனை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் கிரேக்க மரக்குதிரை போல, உருமறைக்கப்பட்ட ஆபத்துக்கள் தமிழர்களின் எல்லாத் தொன்மைகளையும் அழிக்காமல் ஓயப்போவதில்லை.

# வலுவான கூட்டணியாக உருவாகிறது சஜித் அணி

## கயந்த கருணாதிலக தெரிவிப்பு



**கொழும்பு, ஜூன் 15**

**மக்களை ஏமாற்றியே இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. எனவே தற்போதைய சூழ்நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் தோல்வியடையுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.**

நாட்டின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பொதுத்தேர்தல் முடிவடைந்த பின்னர் அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்களின் விலையை மீண்டும் அதிகரிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. அத்துடன் அரசாங்கம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறும் நோக்கத்துடனேயே தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது. எனினும் தற்போது 113 ஆசனங்களைப் பெறுவதற்கு கூட அரசாங்கம் நெருக்கடியைச் சந்தித்துள்ளது. தற்போது ஐக்கிய மக்கள் சக்தி வலுவான கூட்டணியாக மாறிவருகின்றது. மேலும் கடந்த தேர்தலில் மக்களை ஏமாற்றியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது - என்றார். (ப)

## புலனாய்வு அதிகாரி விபத்தில் சிக்கி உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு, தேசிய வைத்தியசாலைப் பணத்தைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்ற சந்தேகநபரான மருத்துவரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்ட புலனாய்வுத்துறை அதிகாரிகளில் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு சம்புத்வ ஜயந்தி மாவத்தைப் பகுதியில் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் அவர் காயமடைந்திருந்தார். இதனையடுத்து அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலன்னறுவை பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான எஸ். அழகப்பெரும என்ற புலனாய்வுத்துறை அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ப)

## தோட்டத் தொழிலாளரின் பின்புலம் இல்லாது எதையும் சாதிக்க முடியாது

### ம.ஆ.மு.செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

மலையகத்தில் அரசியல், சமூக அபிவிருத்தி, நாட்டின் பொருளாதாரம் என்பவற்றில் தோட்டத் தொழிலாளர்களின் பின்புலம் இல்லாமல், எதனையும் சாதிப்பது மிகக் கடினம் என மலையக ஆசிரியர் முன்னணியின் செயலாளர் சி ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளாவது,

பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்காக இலங்கை வந்ததிலிருந்து அந்த மக்கள் சகல விடயங்களிலும் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளார்கள். சொற்ப உரிமைகளைப் பெறக்கூட அதிகூடிய போராட்டங்களையும், இழப்புகளையும் இந்த மக்கள் சந்திக்கின்றனர். இந்த நிலையில் 1000 ரூபாவைக் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு தோட்ட நிறுவனங்கள் அதனை வழங்க முடியாது என்று குறிப்பிட்ட நவீன் திஸாநாயக்க, மேலதிகமாக 50 ரூபாவைக் கொடுத்தால் பதவி விலகப்போவதாகவும் கூறியிருந்தார். எனினும் அந்த நவீன் திஸாநாயக்க இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தச் செயலுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கண்டிக்கப்பட வேண்டியவர் -என்றார். (ப)

# ஐ.தே.கவின் கன்னிப் பரப்புரை தொடர்பில் இன்று அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

ஐக்கிய தேசியக் கட்சி தனது முதலாவது தேர்தல் பரப்புரையை எந்த மாவட்டத்தில் எவ்வாறு முன்னெடுக்கும் என்பதுபற்றி இன்று திங்கட்கிழமை அறிவிக்கவுள்ளது.

இது தொடர்பில் ஐ.தே.கவின் பொதுச் செயலர் அகிலவிராஜ் மேலும் தெரிவித்ததாவது:

சுகாதாரத் துறையினரால் வழங்கப்பட்டுள்ள கொரோனா கட்டுப்பாட்டு பாதுகாப்பு ஆலோசனைகள் உள்ளிட்டவற்றைக் கருத்தில்கொண்டு பெருமளவு மக்கள் ஒன்றுகூடுவதைத் தவிர்க்கும் வகையில் எவ்வாறு பிரசாரங்கள் முன்னெடுப்பது என்பதுபற்றி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் திங்களன்று இடம்பெறும் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும். வழமையாகத் தேர்தல்கள் இடம்பெறுவதைப் போன்றல்லாமல் தற்போது மாறுபட்ட நிலைமையே நாட்டில் காணப்படுகிறது. கொரோனா அச்சுறுத்தல் நிலைமை இன்னும் மாற்றமடையவில்லை. எனவே தேர்தல் பிரசார கூட்டங்கள் எவ்வாறு முக்கியத்துவமுடையனவோ அதனை விட அதிகமாக பொதுமக்களின் பாதுகாப்பு எமக்கு அத்தியாவசியமானதாகும்.

எனவே வழமையைப்போன்று பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட முடியாது. சுகாதாரத்துறையினரால் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆலோசனைகள் மற்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் வழிகாட்டல்கள் என அனைத்தையும் கவனத்தில் கொண்டு பிரசார நடவடிக்கைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படும் என்றும் அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார். (ம)

## படகு கவிழ்ந்து சிறுவன் சாவு

கொழும்பு, ஜூன் 15
படகு கவிழ்ந்ததில் தண்ணீரில் மூழ்கி 8 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் உகண, கொனாகொல்ல நவகிரியா வாவியில் நடந்துள்ளது.
வாவியில் சிறுவர்கள் சிலர், படகுச் சவாரி செய்துகொண்டிருந்த வேளையில் திடீரென படகு கவிழ்ந்துள்ளது.
இதில் குறித்த சிறுவன் தண்ணீரில் மூழ்கியதை தொடர்ந்து ஆபத்தான நிலையில், உகண மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்தான் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
கொனாகொல்ல, நவகிரியாவ பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.
சம்பவம் தொடர்பில் உகண பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (கு)


# சந்தைக்கு வெளியே மரக்கறிகள், மீன்கள் விற்பனைக்குத் தடை

## இன்றிலிருந்து நடைமுறை; நல்லூர் பிரதேச சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15
**நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பொது இடங்களில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் மரக்கறிகள், மீன்கள் விற்பனைக்கு முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தியாகமூர்த்தி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக 2 மாதங்களாக எமது சபையின் ஆளுகைக்குள் இருக்கும் பொதுச் சந்தைகள் பூட்டப்பட்டிருந்தன. அவற்றுக்கு மாற்றீடாக பொது இடங்களில் தனிநபர் இடைவெளிகளைப் பின்பற்றி வியாபாரம் செய்ய சந்தை வியாபாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பலரும் வீதிகளில் மரக்கறி, மீன் வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தனர்.
எனினும் தற்போது நாட்டில் கொரோனாத் தாக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டு வழமை நிலைமைக்குத் திரும்பியுள்ளது.
இதன் பலனாக எமது சபையின் பொதுச் சந்தைகளில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி சந்தைகளைத் திறந்துள்ளோம்.
மக்களும் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி சந்தைக்கு வந்துசெல்கின்றனர். வியாபாரிகளும் தங்களின் சந்தை வியாபார நடவடிக்கைகளை வழமைபோன்று முன்னெடுத்து வருகின்றனர்.
எனவே இன்றிலிருந்து வீதிகளில் மரக்கறிகள், மீன்கள் விற்பனை செய்ய முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.
சில தினங்களுக்கு முன்னர் எமது சபையின் மாதாந்த அமர்வு நடைபெற்றது. அதில் பொதுச் சந்தையில், கடைகளில் வியாபாரம் செய்பவர்களுக்கு இரு மாதங்கள் வாடகை, வரி விலக்கு அளிப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. எனினும், அவை தீர்மானமாக எடுக்கப்படவில்லை-என்றார். (க-20)

## மின்வசதி ஏற்படுத்தினால் 6 குடும்பங்கள் பிழைக்கும்



முல்லைத்தீவு, ஜூன் 15
முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட கோம்பாவில் கிராம அலுவலர் பிரிவில், மாற்றுவலுவுள்ளவர்களுக்கு வாழ்வாதாரமாக தேங்காய் மட்டையை பயன்படுத்தி தும்பு எடுக்கும் இயந்திரம் வழங்கப்பட்ட போதும் தனியான மின்சார இணைப்பு பெற்றுக் கொள்ள முடியாததால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலைக்குச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கைவேலிப்பகுதியில் விஜயறூபன் ராதா என்பவரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றால் தேங்காய்மட்டை பயன்படுத்தி தும்பு எடுக்கும் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரம் வழங்கப்பட்டது.
எனினும், அதை இயக்க மின்சாரம் தேவை.
அதைப் பெற்றுக் கொள்வதற்கு 27 ஆயிரம் ரூபா பணம் தேவையாகவுள்ளதால் அவரின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள தேங்காய் மட்டைகளைப் பயன்படுத்தி தும்பு எடுத்து அதனை பசளைக்காக ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி செய்வார்கள்.
அவர்கள் தற்போது தங்களிடம் வந்து பசளை கேட்கின்றார்கள். வள்ளிபுனம் மற்றும் கைவேலிப்பகுதியில் இவ்வாறு இரண்டு இயந்திரங்கள் மின்சார இணைப்பு இல்லாமல் இயக்கமுடியாத நிலை காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஓர் இயந்திரத்தில் மூன்று பேர்வரை வேலை செய்யலாம். தங்கள் குடும்பங்களின் பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு மின்சார இணைப்பை யாராவது ஏற்படுத்தி கொடுப்பார்களானால் ஆறு பேர் வரை வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வர் என்றும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-19)

# ஜனாதிபதியின் கண்காணிப்பில் நிதி நிறுவனங்கள் வரவேண்டும்

## வவுனியாவில் நடந்த அஞ்சலி நிகழ்வில் மாவட்ட ஓட்டோ சங்கம் கோரிக்கை



வவுனியா, ஜூன் 15
நிதி நிறுவனங்கள் ஜனாதிபதியின் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று வவுனியா முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன் தெரிவித்தார்.
தேசிய முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன குண்டர்களால் தாக்கப்பட்டு அண்மையில் கொல்லப்பட்டிருந்தார். அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு வவுனியாவில் நேற்று நடைபெற்றது.
அதில் உரையாற்றுகையில் ரவீந்திரன் மேலும் தெரிவித்ததாவது:
முச்சக்கரவண்டி சேவையாளர்கள் வறுமை நிலைக்கு உட்பட்டவர்கள். அநேகமானோர் மாதாந்த கட்டுப்பணத்தை செலுத்தும் முறையிலேயே முச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்துள்ளனர். இப்படியிருக்கும்போது விபத்துகள், சுகவீனங்கள் ஏற்பட்டால் மாதாந்த தவணைப்பணத்தை செலுத்த முடியாத நிலையிலேயே அவர்கள் இருக்கிறார்கள். எனவே, இந்த அரச சில விட்டுக்கொடுப்புகளை வழங்கவேண்டும் என்று அரசை கேட்டுக்கொள்கின்றோம்.
அத்துடன் கட்டுப்பணத்தை செலுத்தாத வாகனங்களை மீட்கச் செல்லும் ஊழியர்கள் அந்தந்த பிரதேச சங்களுக்குப் பொறுப்பான பொலிஸாருக்கு தெரிவித்துவிட்டு, அதனை மீட்கும் முறைவழிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.
அவற்றை மீட்கவரும் நபர்கள் நாகரிகமற்ற பேச்சுத்தன்மை உடையவர்களாக இருக்கிறார்கள். எனவே நிதி நிறுவனங்கள் இந்த விடயத்தில் கரிசனை கொள்ளவேண்டும். இந்த நிதி நிறுவனங்கள் ஜனாதிபதியின் கண்காணிப்பில் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். என்றார்.
வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ரவி தலைமையில் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வில், ஜயவர்தனவின் ஒளிப்படத்துக்கு மலர்தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.
நிகழ்வில் முச்சக்கரவண்டிகள் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இதில் ஜயவர்தனவின் படுகொலைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (த-110)

## 30 குடும்பங்களுக்கு மரக்கறி நாற்றுக்கள்



முல்லைத்தீவு கைவேலியில் 30 குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டம் செய்வதற்கான மரக்கறி நாற்றுகள் வழங்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் செயற்பட்டுவரும் 'பசுமை இல்லம்' அமைப்பு வீடுகளில் வீட்டுத்தோட்டங்களை வளர்க்கும் செயற்பாட்டுக்கு உதவிபுரிந்து வருகின்றது.
இந்தநிலையில் அதன் இணைப்பாளர் கிரிஸ் தலைமையில் மரக்கறிக் நாற்றுக்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் மந்துவில், கோம்பாவில் கிராம விவசாய போதனாசிரியர்கள், கோம்பாவில் கிராம அலுவலர், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு மரக்கறி நாற்றுக்களை வழங்கினர் என்று தெரிவிக்கப்பட்டது.
நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா நிலையில் மக்களின் விவசாய செய்கையை ஊக்குவிக்கும் நோக்கிலும் தன்னிறைவான பொருளாதாரத்தை மக்கள் மத்தியில் வளர்த்தெடுக்கும் நோக்கிலும் வீட்டுத்தோட்டம் செய்யும் மக்கள் தம்முடன் இணைந்து உள்ளீடுகளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் முல்லைத்தீவு பசுமை இல்ல இணைப்பாளர் கிரிஸ் தெரிவித்துள்ளார். (த-19)

# தேர்தல் நெருங்குவதால் சுமந்திரனுக்கு புலிப்பாசம்

## சட்டத்தரணி மணிவண்ணன் சாட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 15

**தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொச்சைப்படுத்தும் சுமந்திரனுக்கு, முன்னாள் போராளிகள் மீது திடீரென பொங்கிய பாசம் 'தேர்தல் நெருங்குகின்றது. தமிழ் மக்களை ஏமாற்ற நாங்கள் வந்துவிட்டோம்' என்ற கருத்தினையே வெளிப்படுத்துகின்றது இவ்வாறு தெரிவித்தார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன்.**

யாழ்ப்பாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் போராளிகளுக்கு ஆதரவு கொடுப்பது மற்றும் கோத்தாபய அரசுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். முன்னாள் போராளிகள் அரசியலுக்கு வரவேண்டும் என்றும், அவர்களுக்கு தமது கட்சியில் இடம் கொடுப்போம் என்றும், போராளிகள் தியாகங்கள் செய்தவர்கள் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

அவருடைய இந்தக் கருத்துக்கள் ஒன்றை மட்டும் தெளிவாக சொல்கின்றன. தேர்தல் நெருங்கிவிட்டது ஆகவே நாங்கள் ஏமாற்றுவதற்காக வந்துவிட்டோம் என்பதே அந்தக் கருத்து. முன்னாள் போராளிகள் தியாகிகள் என்று சுமந்திரன் கூறுவது வேடிக்கையான விடயம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தையோ அல்லது அவர்களின் அரசியல் போராட்டத்தையோ தான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சுமந்திரன் ஏற்கனவே கூறியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் போராளிகள் வேலையில்லாத காரணத்தினால் போராட்டத்தில் இணைந்து கொண்டார்கள் என்று விடுதலை போராட்டத்தை கொச்சைப்படுத்திய அவர்தான் இன்று போராளிகளை அரசியலில் இணைத்துக் கொள்ளப் போகின்றேன் என்று கூறுகின்றார்.

இவ்வாறு பேசிய சுமந்திரன் இன்று போராளிகள் தொடர்பில் வெளியிடும் கருத்து தேர்தலில் மக்களை ஏமாற்றி வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கான முனைப்பே தவிர வேறு ஒன்றும் இல்லை.

சுமந்திரன் போன்ற ஏமாற்றுப் பேர்வழிகள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும். இவர்களை அரசியல் அரங்கில் இருந்து மக்கள் அகற்ற வேண்டும் - என்றார். (ம-20)





# சங்கிலியனின் 401ஆவது நினைவுதினம் மன்னாரில்

மன்னார், ஜூன் 15

சங்கிலிய மன்னனின் 401ஆவது நினைவுதினம் மன்னார் கீரி கடற்கரையில் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

சங்கிலிய மன்னனின் சிரார்த்த கிரியைகளை விஜயபாபு குருக்கள் மேற்கொண்டிருந்தார். இந்த நிகழ்வில் ம.ஐங்கரசர்மா குருக்கள் மற்றும் சைவப்பிரமுகர்களும் கலந்து சங்கிலிய மன்னனின் நினைவுதினத் தைக்கடைப்பிடித்தனர். இந்த நிகழ்வினை தமிழ் தேசிய சைவ மக்கள் கட்சி ஏற்பாடு செய்திருந்தது. (ம-213)

# நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டோர் கைது

கிளிநொச்சி, ஜூன் 15

நீதிமன்றத்தத்தால் பிடியானை பிறப்பிக்கப்பட்ட 10 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு காணப்பட்டு குறித்த வழக்குகளுக்கான திகதிகளில் சமுகமளிக்காதோருக்கு நீதிமன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அதில் 5 பேர் திறந்த பிடியாணையிலும் 5 பேர் நாள் பிடியாணையிலும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம-6)

# மீண்டும் பஸ் சேவை ஆரம்பம்

பருத்தித்துறையிலிருந்து திக்கம், வதிரி நெல்லியடி ஊடாக யாழ்பாணம் வரை செல்லும் இலங்கைப் போக்குவரத்து பேருந்து சேவை கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

நாட்டில் ஏற்பட்ட கொரோனாத் தாக்கத்தால் இந்தச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் மீண்டும் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-422)

# முன்னாள் எம்.பி. சரவணபவன் நிதியுதவியில் மின் விளக்குகள் பொருத்தும் பணி ஆரம்பம்

கொடிகாமம், ஜூன் 15

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் நிதி உதவியில் மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் கைதடியிலிருந்து எழுதுமட்டுவாழ் வரை வீதி மின் விளக்குகள் பொருத்துவதற்காக 35 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தப் பணிகள் அண்மையில் இடம்பெற்றன.

எனினும், கொரோனா பெருந்தொற்றை அடுத்து பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. தற்போது நிலைமை ஓரளவு சுமுகமானதை அடுத்து மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ம-159)

# கிளிநொச்சியில் 4,000 குடும்பங்களுக்கு இடர்கால நிதியுதவி வழங்கப்படவில்லை

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி மாவட்டத்தில் இன்னமும் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களுக்கு இடர்கால இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆரணி தவபாலன் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாதம் 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. அதன் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஆரணி தவபாலனிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமுர்த்தி திணைக்களத்தின் ஊடாக நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏற்கனவே முதல்கட்ட நிதி வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டாம் கட்ட நிதி வழங்கப்பட்டு வருகின்றது. இரண்டாம் கட்டக் கொடுப்பனவு கடந்த ஒரு மாதகாலமாக வழங்கப்பட்டு வருகின்றது. எனினும் கிளிநொச்சியில் சுமார் 4 ஆயிரம் குடும்பங்களுக்கு இரண்டாம் கட்ட கொடுப்பனவு வழங்கப்படவில்லை. நிதி படிப்படியாகவே விடுவிக்கப்படுகின்றது. விரைவில் மக்களுக்கு இரண்டாம்கட்டத் தொகை வழங்கப்படும்-என்றார். (ம-6)





# சாவகச்சேரிப் பகுதியில் பனம்பொருள் அங்காடி!

சாவகச்சேரி, ஜூன் 15

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தினர் பிரதேச பனைசார் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பனம் பொருள் அங்காடியினை சாவகச்சேரி பேருந்து நிலையத்துக்கு முன்பாக கடந்த வெள்ளிக்கிழமை திறந்துள்ளனர்.

சங்கத் தலைவர் தெய்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் இராமநாதன் சுரேஸ் கலந்து கொண்டார். (ம-9)

# அரைச் சொகுசு பேருந்துக் கட்டணத்தை சாதாரண பேருந்துகள் அறவிடமுடியாது

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 15

**சாதாரண பேருந்துகளில் அரைச் சொகுசுப் பேருந்துகளுக்கான கட்டணத்தை அறிவிடுவதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் அனுமதி வழங்கப்படமாட்டது என போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

சாதாரண பேருந்துகளுக்கான கட்டணத்தை அதிகரிக்கும் பேருந்துச் சங்கங்கள் விடுத்த கோரிக்கை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சாதாரண கட்டண அறவீட்டுடன் முன்னெடுக்கப்படும் பேருந்துச் சேவைகளுக்கும், அரைச் சொகுசுப் பேருந்துகளில் அறவிடப்படும் பயணக் கட்டணத்தை அறவிடுவதற்கு வாய்ப்பு வழங்குமாறு போக்குவரத்துத் தரப்பினர் அரசிடம் யோசனை முன்வைத்தனர். இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன மற்றும் அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் அஞ்சன ப்ரியஞ்சித் ஆகியோர் இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

நாடுமுழுவதும், சாதாரண கட்டண அறவீட்டுடன் இயங்கும் பேருந்துகள், ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமையவே பயணிகளை ஏற்றிச் செல்கின்றன. இந்த நிலையில், கொரோனாத் தொற்றுக்கு முன்னர் பெற்ற வருமானத்தில் 50 வீத வருமானம் குறைவடைந்துள்ளதாக போக்குவரத்து துறையினர் தெரிவித்துள்ளனர்.

எனவே, ஆசன எண்ணிக்கைக்கு அமைய, பயணிகளை ஏற்றிச் செல்லும் அரைச் சொகுசுப் பேருந்துகளில் அறவிடப்படும் கட்டணத்தை, சாதாரண கட்டணத்தை அறிவிடும் பேருந்துகளுக்கு அறவிடுவதற்கு வாய்ப்பளிக்குமாறு அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் அண்மையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது இந்தப் பிரச்சினை தொடர்பில் அறிவிக்கவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் பேருந்துக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு எந்தவிதத்திலும் இடமளிக்க முடியாது - என்றார். (ப)

# பூனாகலை வனத்தில் தீ

கொழும்பு, ஜூன் 15

பூனாகலை வனப்பகுதியில் ஏற்பட்ட தீப்பரவலில் சுமார் 50 ஏக்கர் நிலம் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தீப்பரவல் நேற்றுமுன்தினம் மாலை வேளையில் ஏற்பட்டதாகவும் காற்றின் வேகம் காரணமாக தீயைக் கட்டுப்படுத்துவது கடினமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் வனப்பகுதியில் உள்ள பல மரங்கள் சேதமடைந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

# விபத்தில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 15

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காட்மோர் தோட்ட வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

விபத்தில் உயிழந்தவர் குயின்ஸ்லேன்ட் தோட்டத்திலுள்ள பிரவுன்சுவிக் தோட்டத்தில் வசிக்கும் 22 வயதுடைய ராஜ்குமார் சுமன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம)

*மலையகத்தில்*

# சுற்றிவளைப்பு; 411 பேர் கைது

கொழும்பு, ஜூன் 15

மேல் மாகாணத்தில் நேற்றுமுன்தினம் காலை 6 மணிமுதல் நேற்று அதிகாலை வரையில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 411 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஹெரோய்ன் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த 170 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களிடம் இருந்து 69 கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கஞ்சா மற்றும் சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 204 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)





*நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ள*

# தமிழரசின் மட்டக்களப்புக் கிளை சனிக்கிழமை முன்னாயத்தக் கூட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 15

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சிக் கிளைகளின் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை மட்டக்களப்பிலுள்ள கட்சிப் பணிமனையில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலரும், வேட்பாளருமாகிய கி:துரைராசசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சிரேஸ்ட உபதலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்.செல்வராசா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ. யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம)

# மனைவியைத் தாக்கியவர் மறியலில் வைக்கப்பட்டார்

சாவகச்சேரி, ஜூன் 15

மனைவியைத் தாக்கி காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் கணவன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் எழுதுமட்டுவாழ் கரம்பகத்தைச் சேர்ந்த பெண் கொடுத்த முறைப்பாட்டையடுத்து கணவன் கைது செய்யப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அதன்போதே அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (த-9)

# எப்படி கிடைத்தது துப்பாக்கி? பொலிஸ் குழுக்கள் ஆய்வு

கொழும்பு, ஜூன் 15

கொழும்பு - சுதந்திர சதுக்க வளாகத்தில் சடலமாக மீட்கப்பட்டவர் பயன்படுத்திய துப்பாக்கி அவருக்கு எப்படிக் கிடைத்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்காக மூன்றுவிசேட பொலிஸ்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொய்ண்ட் 22 அரெஸ்டா ரக கறுப்பு நிறமான குறித்த துப்பாக்கி தொடர்பிலேயே இவ்வாறு ஆராயப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் உயிரிழப்பதற்கு முன்னர் தமது நெருங்கியவருக்கு எழுதியிருந்த கடிதத்தில் அந்தத் துப்பாக்கியை தாம் கொள்வனவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். எவ்வாறாயினும் அந்த துப்பாக்கி யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது மற்றும் அவருக்குக் கிடைக்கப்பெற்ற விதம் தொடர்பில் மேலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாதுகாப்புப் பிரிவினர் தவிர்ந்த வேறு எவரேனும் துப்பாக்கியைப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்தால் அதற்கு அனுமதிப்பத்திரம் அவசியம் என்பது குறிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும் உயிரிழந்தவர் பயன்படுத்திய துப்பாக்கியைக் கொள்வனவு செய்வதற்கு அவ்வாறான அனுமதிப்பத்திரம்அவசியம்இல்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த துப்பாக்கி அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ப)

# 2020ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம்

கொழும்பு, ஜூன் 15

எதிர்வரும் 21ஆம் திகதி முழு அளவிலான சூரிய கிரகணம் ஏற்படும் என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்தனா ஜெயரத்ன கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள ஒரு பகுதியினர் இதைப் பார்க்க முடியுமெனவும் அவர் தெரிவித்தார்.

2020 ஆம் ஆண்டின் முதல் சூரிய கிரகணம் ஜூன் 21 ஞாயிற்றுக்கிழமை நிகழ உள்ளது. இந்த நேரத்தில் சூரியன் ஒரு பிரகாசமான வளையம் போல் காட்சி தரும் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# சரியான உணவுப் பழக்கமின்மையால் ஒரு நாளில் 400 பேர் சாவடைகின்றனர்

## கோறளைப்பற்று மத்தி சுகாதார அதிகாரி தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 15**

**உணவுப் பழக்கவழக்கத்தைச் சரியான முறையில் கையாளாமையால் உலகில் நாள் ஒன்றுக்கு 400 வரையானவர்கள் உயிரிழப்பதுடன் அதில் ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகள் உயிரிழப்பது நாற்பது வீதம் எனக் கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்து அதிகாரி மருத்துவர் எஸ்.ரீ.நஜீப்கான் தெரிவித்தார்.**

தேசிய உணவுப் பாதுகாப்பு வாரத்தினை முன்னிட்டு கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவிலுள்ள உணவு விற்பனைகளை மேற்கொள்ளும் உரிமையாளர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

உரிய பாதுகாப்பு முறையற்ற உணவுப் பழக்கவழக்கத்தின் மூலம் வருடத்திற்கு 600 மில்லியன் பேர் நோயாளிகளாக மாறுகின்றனர். உலகத்தில் உள்ள மொத்த சனத்தொகையில் பத்தில் ஒருவர் நோளியாகின்றனர். இதில் வருடத்திற்கு நான்கு இலட்சத்து இருபதாயிரம் பேரும், நாள் ஒன்றுக்கு 400 பேரும் இறப்பதுடன், அதில் ஒரு இலட்சத்து இருபதாயிரம் குழந்தைகள் என்பது கவலையான விடயமாகும். பக்ரீரியா, பங்கஸ், வைரஸ் மற்றும் கெமிக்கல் மூலமாக உணவுகள் நஞ்சாக மாறுகின்றன. இதற்கு நாம்தான் காரணம். நாம் ஒவ்வொருவரும் தொழில் செய்ய வேண்டும் அதற்கு மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆனால் அதனை அரசாங்கம் விதித்துள்ள சுகாதார முறைப்படி கடைப்பிடிப் போமானால் எதிர்காலத்தில் பாதுகாப்பற்ற, முறையற்ற உணவுப் பழக்கவழக்கத்தினால் ஏற்படும் இறப்புக்களைக் குறைத்துக் கொள்ள முடியும். அதற்கு அதனுடன் சம்மந்தப்பட்ட அனைவரும் உழைக்க வேண்டும் - என்றார். (ப)

# டெங்கை ஒழிக்க கால்வாய் துப்புரவு



மட்டக்களப்பு, ஜூன் 15

டெங்கின் தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் வாழைச்சேனைப் பிரதேச சபைக்குட்பட்ட செம்மண்ணோடைப் பகுதியிலுள்ள கால்வாய்கள் நேற்று துப்புரவு செய்யப்பட்டன.

கோறளைப்பற்று மத்தி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரும், வாழைச்சேனைப் பிரதேச சபையும் இணைந்து இந்தப் பணியை முன்னெடுத்தனர். பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூர் தலைமையில் செம்மண்ணோடை கிராம அலுவலர் ரி எம்.எம்.அன்வர் சதாத், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் களத்தில் நின்றனர். (ப-150)



# ஆய்வறிக்கை நூல் வெளியீடு

கொழும்பு, ஜூன் 15

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் அங்கத்துவம் பெறும் பெண்களின் 'மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களில் பெண்கள்' எனும் ஆய்வறிக்கை நூல் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்வு காத்தான்குடி ஆய்வுக்கும், மேம்பாட்டிற்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சனிக்கிழமை காத்தான்குடி பீச்வே ஹோட்டலில் நடைபெற்றது.

மகளிர் ஒன்றிய பணிப்பாளர் திருமதி. அனீஷா பிர்தௌஸ் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் காத்தான்குடி நகரசபை உறுப்பினர் திருமதி.ஜெம்குத் நிசா மசூத், காத்தான்குடி மத்திய கல்லூரி அதிபர் எஸ்.எச்.பிர்தௌஸ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பிரதேச மட்ட சமூக ஆர்வலர்கள், மகளிர் ஒன்றியப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

குறித்த ஆய்வு நூலில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள பெண் அங்கத்தவர்களின் விவரங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் கட்டமைப்பும் பணிகளும், பெண்களின் அரசியல் அறிவும் ஆர்வமும் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலுள்ள பெண்களுக்கான ஆதரவும் சவால்களும், இவற்றுக்கான சிபாரிசுகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# உரிமைகளை வென்றெடுப்பதற்கே தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்

## இப்படிச் சொல்கின்றார் ஜனகன்

மட்டக்களப்பு, ஜூன் 15

தமிழ், முஸ்லீம் மக்கள் தமக்கு உதவி செய்பவர்களை மாத்திரமே பொதுத் தேர்தலில் தெரிவுசெய்ய வேண்டும் என்ற நோக்கில் வாக்களிக்காமல், தங்களது உரிமைகளை வென்றெடுப்பதன் நோக்கத்திலேயே வாக்களிக்க வேண்டும் இவ்வாறு தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர்களில் ஒருவரான ஜனகன் விநாயகமூர்த்தி.

வெள்ளவத்தையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் பரவலின் பின்னர் நாட்டில் சிறு தொழில் மற்றும் நுண்கடன் திட்டங்கள் தொடர்பில் பெரும் நெருக்கடி நிலைமைகள் தோன்றியுள்ளன. குத்தகைக்கு பெறப்பட்ட முச்சக்கர வண்டியின் கட்டணம் மீளச் செலுத்தப்படாமையின் காரணமாக சம்பந்தப்பட்ட குத்தகை நிறுவனம் முச்சக்கர வண்டியை பறிமுதல் செய்திருந்தது.

இந்த விவகாரம் தொடர்பில் குத்தகை நிலையத்தில் கலந்தாலோசிக்க சென்றிருந்த இலங்கை சுயதொழிலாளர் தேசிய முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன அந்த நிறுவனத்தின் முன்பாகக் கொலைசெய்யப்பட்டார்.

கொழும்பில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மற்றும் முஸ்லீம் வாக்குகள் காணப்படுகின்றன. அனைத்து வாக்குகளையும் சிந்தித்துப் பயன்படுத்த வேண்டும். மொட்டுக் கட்சியை பொறுத்தமட்டில் ஒரு சிறுபான்மை வேட்பாளர்கூட களமிறங்கவில்லை. காரணம் ஆரம்பத்திலிருந்தே அரசு சிறுபான்மை மக்களை புறக்கணித்து வந்தமையே. இம்முறை கொழும்பு வாழ் தமிழ், முஸ்லீம் மக்கள் இந்த விடயம் தொடர்பில் சிந்தித்து வாக்களிக்க வேண்டும் என்றார். (ம)

# ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவே ஐக்கிய மக்கள் சக்தி போரிடும்

## ஹரீன் பெர்ணான்டோ தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 15

நாட்டுக்குள்ளும் கட்சிக்குள்ளும் மீண்டும் மீண்டும் ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்படிவதா என்று மக்கள் சிந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும். நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி இரு பிரதான விடயங்களுக்காகப் போராடவுள்ளது. அவற்றில் முதலாவது நாட்டிலிருந்து ஏகாதிபத்திய குடும்ப ஆட்சியை ஒழிப்பதும் அடுத்தது ஐக்கிய தேசிய கட்சியிலுள்ள ஏகாதிபத்திய தலைவரை அந்த பதவியிலிருந்து நீக்குவதுமாகும் என்று முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் திங்கட்கிழமை (இன்று) ஐக்கிய மக்கள் சக்தியினால் 'உங்கள் பிரச்சினைகளை எமக்கு கூறுங்கள்' என்ற தொனிப்பொருளில் தகவல் சேகரிப்பு வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த வேலைத்திட்டத்தில் கிடைக்கப்பெறும் தகவல்களை ஜனாதிபதியிடம் கையளித்து அவற்றுக்கு தீர்வினைக் கோரவுள்ளோம். ஆட்சியிலிருப்பவர்கள் தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத் துள்ளனர். தற்போது நாட்டு மக்கள் இளம் பிரதமர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். ஒரு குடும்பம் மாத்திரம் நாட்டை தொடர்ந்தும் ஆட்சி செய்வதா அல்லது மக்கள் ஆட்சி செய்வதா என்பதே இதற்கான காரணமாகும். எனவே 'வெற்றி பெறுவோம்' என்ற தொனிப் பொருளிலேயே ஐக்கிய மக்கள் சக்தி பரப்புரைகளை முன்னெடுக்கவுள்ளது - என்றார். (ம)

# பூஸாவிலிருந்து 11பேர் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 15

பூஸா கடற்படை முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 11 பேர், தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்றுமுன்தினம் வீடு திரும்பியுள்ளனர்.

குறித்த நபர்கள் அனைவரையும் பி.சி.ஆர் சோதனை மேற்கொண்டதன் பின்னரே, வீடுகளுக்குச் செல்ல அனுமதித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன. பூஸா தனிமைப்படுத்தல் மையத்திலிருந்து இதுவரை 302 பேர் வெளியேறியுள்ளதுடன், மேலும் 86 பேர் தொடர்ந்தும் தனிமைப் படுத்தப்பட்டு உள்ளனரென, கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ப)





மட்டக்களப்பு மேற்கில் உயர்தரம் பயிலும் 10 மாணவர்களுக்கு ஜீவஊற்று அன்பின்கரம் அமைப்பால் துவிச்சக்கர வண்டிகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-46)

# பி.சி.ஆர். சான்றிதழ் பெறுதல் சுற்றுலாவிகளுக்கு அவசியம்



**கொழும்பு, ஜூன் 15**
**ஓகஸ்ட் முதலாம் திகதி முதல் இலங்கைக்குச் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். பி.சி.ஆர் பரிசோதனை மூலம் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் என்று சுற்றுலாத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:
'ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னர் வெளிநாடுகளில் உள்ளவர்களை, தனிமைப்படுத்தல் சட்டதிட்டத்துக்கு உட்பட்ட வகையில் இலங்கைக்கு அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும். இப்பணி முடிவடைந்த பின்னரே சுற்றுலாப் பயணிகளுக்காக கட்டுநாயக்க விமான நிலையம் திறக்கப்படும். அந்தத் திகதி ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னதாகக்கூட இருக்கலாம்.
சுற்றுலாப் பயணிகள் இங்கு வருவதற்கு முன்னர் பி.சி.ஆர் பரிசோதனை செய்திருக்கவேண்டும். இங்கு வந்த பின்னரும் அந்தச் சோதனை நடத்தப்படும். முடிவு வெளிவரும் வரை நாம் முன்மொழியும் ஹோட்டலிலேயே அவர்கள் தங்கியிருக்க வேண்டும்.
கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகவில்லை என்பது பரிசோதனையில் உறுதிப்படுத்தப்படுமானால் அவர்கள் சுற்றுலா செல்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள். எனினும், சுகாதாரப் பரிசோதகர்கள் ஊடாக கண்காணிப்பு இடம்பெறும்- என்றார். (ம-44)

## இடுகம நிதியத்தின் இருப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 15
கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் பணிகளுக்கென ஜனாதிபதியினால் சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியமான இடுகம நிதியத்தின் இருப்பு ஆயிரத்து 378 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் ஹெலரணவிரு படையணியின் அநுராதபுர மாவட்ட அலுவலகத்தால் 2 இலட்சத்து 91 ஆயிரம் ரூபா இடுகம நிதியத்துக்கு நன்கொடை செய்யப்பட்டது.மேலும் சில தனியார் நிறுவனங்களும் நிதியத்துக்கு நன்கொடை செய்துள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இடுகம நிதியம் தொடர்பில் 0112 320 880 அல்லது 0112 354 340 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ப)

## அதிக விலைக்கு இறைச்சி விற்றால் சட்ட நடவடிக்கை

### நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 15
கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமான விலையில் கோழி இறைச்சி விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை எச்சரித்துள்ளது.
இது தொடர்பில் நாடளாவிய ரீதியில் சுற்றி வளைப்புகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
அதிக விலையில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பில் அதிக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. தோல் உரிக்கப்படாத ஒரு கிலோகிராம் கோழி இறைச்சிக்கான நிர்ணய விலை 430 ரூபா எனவும், தோல் உரிக்கப்பட்ட ஒரு கிலோ கோழி இறைச்சிக்கான நிர்ணய விலை 500 ரூபா எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிர்ணய விலைக்கு அதிகமாக கோழி இறைச்சி விற்பனை செய்வோருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (எ)

### ஓட்டோ சங்கத்தின் தலைவர்

## படுகொலையை கண்டிக்கிறார் கரு ஜெயசூரிய



கொழும்பு, ஜூன் 15
தனது மக்களுக்காகக் குரலெழுப்பிய ஓர் உண்மையான தொழிற்சங்கவாதி படுகொலை செய்யப்பட்டுள்ள சம்பவம் கடும் கண்டத்திற்குரியது எனத் தெரிவித்திருக்கும் முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, நாட்டில் இடம்பெறும் இத்தகைய ஈவிரக்கமற்ற செயற்பாடுகளுக்கு எதிராக மக்களனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளார்.
வாகன குத்தகை வழங்கல் மாபியா தொடர்பில் வெளிப்படுத்திய தேசிய முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன கடந்த செவ்வாய்கிழமை வாகனங்களைக் குத்தகைக்கு வழங்கும் நிதி நிறுவனம் ஒன்றின் முன்னால் கொலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவத்துக்குக் கண்டனம் வெளியிட்டு தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவிலேயே மேற்படி கண்டனத்தைத் தெரிவித்துள்ளார் கரு ஜயசூரிய.
சுனில் ஜயவர்தன கொலை செய்யப்பட்ட சம்பவம் மிகுந்த கண்டனத்துக்குரியதாகும். அவர் தன்னுடைய மக்களின் பக்கம் தொடர்ந்தும் நின்ற உண்மையான ஓர் தொழிற்சங்கவாதி ஆவார். அவர் உதவி தேவைப்பட்ட மற்றுமொரு முச்சக்கரவண்டி சாரதிக்காக உதவ முற்பட்டதுடன், அரசு வழங்குமாறு உத்தரவிட்டுள்ள உரிய தள்ளுபடிகளை அல்லது சலுகைகளை வழங்குமாறே கோரினார். இவருடைய படுகொலை போன்ற மிக மோசமான ஈவிரக்கமற்ற சம்பவங்களுக்கு எதிராக மக்கள் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும் என்று அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார் கரு ஜயசூரிய. (ம)



## சந்திரிகா – மங்கள நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, ஜூன் 15
ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை அவரது அத்தனகல்ல இல்லத்தில் நேற்றுச் சந்தித்து பேசினார்.
இருவரும் நெருங்கிய நண்பர்களென்பது குறிப்பிடத்தக்கது.
நாடாளுமன்ற அரசியலில் இருந்து விலகுவதாக சில தினங்களின் முன்னர் மங்கள அறிவித்திருந்த நிலையில், இந்த சந்திப்பு நடந்தது. (ஒ,5)




## திருகோணமலையில் 30 பேருக்கு விவசாயக் கன்றுகள் வழங்கல்!

தமிழர் புலம்பெயர் அமைப்பின் கீழ் இயங்கும் பசுமை இல்லம் தொண்டு நிறுவனம் திருகோணமலையில் 30 பயனாளிகளுக்கு ஆயிரத்து 200 விவசாயக் கன்றுகளை நேற்று வழங்கியது. திருகோணமலை மாவட்ட பசுமை இல்லத்தின் ஒருங்கிணைப்பாளர் கா.வினோத்குமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் திருகோணமலை விவசாய திணைக்களப் போதனாசிரியர் அருணன், பசுமை இல்லம் நிர்வாக உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். (ம)

**வீடு வாடகைக்கு உண்டு**
யாழ் ஓட்டுமடம் பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:- 076 454 7888

**மைதான பராமரிப்பாளர் தேவை**
எமது கல்லூரியின் மைதான பராமரிப்பிற்கும் TURF பராமரித்தலிற்கும் அனுபவம் உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவை, அனுபவ சான்றிதழுடன் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 20.06.2020 இற்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.
யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. -அதிபர்

## அரசின் அவகாச காலம் முடிவதற்குள்

# வாகனங்களைப் பறிமுதல்செய்தால் இனிமேல் கொள்ளைச் சம்பவம்

**கொழும்பு, ஜூன் 15**

**தனியார் கடன் தவணைகளை அறவிடுவதற்காக அரசு வழங்கியுள்ள கால அவகாசத்துக்குள் தவணைக் கட்டணம் செலுத்தவில்லை என்று நிதி நிறுவனங்களோ, குத்தகை நிறுவனங்களோ வாகனங்களை பறிமுதல் செய்தால் அதனை கொள்ளைச் சம்பவமாக கருதி விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பதில் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.**

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள தலைமையகம், அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நாடளாவிய ரீதியில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததினால் மக்களின் வருமானம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இதனால் மக்களுக்கு சலுகைகளை வழங்கும் நோக்கில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதற்கமைய தனியார் கடன் தவணைகளை அறவிடுவதற்கு ஆறு மாதகாலம் அவகாசம் வழங்குமாறு குறிப்பிட்டு அரசு கடந்த மார்ச் மாதமே வர்த்தமானி வெளியிட்டிருந்தது.

இதன்போது வாகன குத்தகை நிறுவனங்களும் இவ்வாறு 6 மாதகால அவகாசத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் சில நிறுவனங்கள் அதனைக் கடைப்பிடிப்பதில்லை என்றும், தவணைக் கட்டணங்களைச் செலுத்த தவறும் வாகனங்களை பறிமுதல் செய்வதாகவும் தெரியவந்துள்ளது.

அரசால் வழங்கப்பட்டுள்ள இந்தச் சலுகை காலத்திற்குள் நிதி நிறுவனமோ, குத்தகை நிறுவனமோ தவணைக்கட்டணங்கள் செலுத்தப்படவில்லை என்று பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு அளித்தால் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று பதில் பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்க ளுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதேவேளை இந்த சலுகைக் காலத்தில் தவணைக்கட்டணத்தைச்செலுத்தவில்லை என்ற காரணத்தினால் குத்தகை நிறுவனங்களால் வாகனங்களை பறிமுதல் செய்யப்படால் அதனைத் தண்டனைச் சட்டக்கோவைக்கமைய கொள்ளை அல்லது திருட்டு தொடர்பான வழக்காக பதிவுசெய்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறும், இவ்வாறு வாகனங்களை பறிமுதல் செய்துவிட்டு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளிக்கவரும் குத்தகை நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள வாகனங்கள் தொடர்பிலும் மேற்கூறப்பட்டதைப் .போன்று நடவடிக்கை எடுப்பதுடன், அந்த வழக்கை குற்றவியல் சட்டத்திற்கமைய விசாரணை நடத்தவேண்டும் என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் ஆலோசனை வழங்கியுள்ளார் - என்றுள்ளது." (ம)

## விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு, ஜூன் 15

வாகன விபத்து ஒன்றில் சிக்கி ஓட்டமாவடியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியின் மீயான்குளம் பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஓட்டமாவடிப் பிரதேசத்தில் இருந்து தொழில் நிமித்தம் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த வேளையில் ஓட்டமாவடியில் இருந்து தம்புள்ளை நோக்கிப் பயணம் செய்த சிறியரக பட்டா வாகனம் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரனைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் ஓட்டமாவடி 1 ஹுதாப்பள்ளி வீதியைச் சேர்ந்த கல் வியாபாரி வரிசை முஹம்மது கலீல் றகுமான் (வயது-48) என்பவர் காயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் ஓட்டமாவடியைச் சேர்ந்த வாகனச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (பு-150)

## படகிலிருந்து தவறி வீழ்ந்தவர் உயிரிழப்பு

கொழும்பு.ஜூன் 15

பொலன்னறுவை, அலுத்வெவ நீர்த்தேக்கத்தில் படகுச் சவாரி செய்வதற்காக சென்ற ஒருவர், படகிலிருந்து தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

நீர்த்தேக்கத்தில் படகுச் சவாரி செய்வதற்காக சிலர் சென்றிருந்த நிலையில், அதிலொருவர் தவறி வீழ்ந்துள்ளதாக, பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தவறி வீழ்ந்தவர், பொலன்னறுவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார். பொலன்னறுவை, வீரபெதேச பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (க)

## கிடாரம் கிழங்குகளை பிடுங்கிய இருவர் கைது

*100 கிலோ கிடாரம் கிழங்குகள் மீட்பு*

கொழும்பு ஜூன் 15

சட்டவிரோதமான முறையில் மருத்துவ மூலிகைக் கிடாரம் கிழங்கு பிடுங்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டதுடன், மருத்துவ மூலிகைக் கிடாரம் கிழங்கும் மீட்கப்பட்டது என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

வாகரைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பனிச்சங்கேணிப் பகுதியில் நேற்று இந்த கைது நடவடிக்கை முன்னெடுப்பட்டது.

வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பனிச்சங்கேணி காட்டுப் பகுதியில் வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினர் மற்றும் வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர்களும் நடவடிக்கை மேற்கொண்டனர். இதன்போதே இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது ஆயிரம் கிலோகிராம் எடையுள்ள எழுபத்தையாயிரம் (75,000) ரூபா பெறுமதியான மருத்துவ மூலிகையான கிடாரம் கிழங்கு கைப்பற்றப்பட்டுள்ளது என்று வாழைச்சேனை வட்டார வன உத்தியோகத்தர் எஸ்.தணிகாசலம் மேலும் தெரிவித்தார். (ப)

## அலுவலர்களான தம்பதியரை வீட்டைவிட்டு வெளியேற்றவும்

கணவனை இழந்த பெண்
பிரதேச செயலரிடம் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 15

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு உட்பட்ட தேவிபுரம் விக்கி வீதியில் அரச அலுவலர்களான தம்பதியர் வசிக்கும் வீடு தன்னுடையது என்றும் அவர்களை அந்த வீட்டிலிருந்து வெளியேற்றுமாறும் கணவனை இழந்த பெண்ணொருவர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலரிடம் முறையிட்டுள்ளார்.

மோகனரூபினி என்ற இரண்டு பிள்ளைகளைகளின் தாயாரே இவ்வாறு குற்றஞ்சாட்டி கோரிக்கைவிடுத்துள்ளார்.

2005 ஆம் ஆண்டு விக்கி குடியிருப்பு 25 வீட்டுத்திட்டத்தில் அரச சார்பற்ற நிறுவனத்தால் வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டிருந்தது.

2009 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தனது கணவர் போரில் உயிரிழந்தார் என்றும், 2009 ஆம் ஆண்டு வவுனியா இடைத்தங்கல் முகாமுக்கு தான் சென்றிருந்தார் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

பின்னர் ஆண் உதவி இல்லாத நிலையில் தனது இரண்டு பிள்ளைகளுடன் தனது சொந்த ஊரான அம்பாறை நாவிதன் வெளியில் உள்ள தனது தாயாருடன் வாழ்ந்து வந்தேன் என்றும் அந்தப் பெண் கூறுகின்றார்.

2012 ஆம் ஆண்டு புதுக்குடியிருப்பு பகுதியில் மீள் குடியேற்றப்பட்டபோது தனது காணியை பார்வையிட்டு பராமரித்து வந்தநிலையில், 2015ஆம் ஆண்டு தொடக்கம் அரச அலுவலர்களாக பணிபுரியும் கணவன் மனைவி இருவரும் அவரது வீட்டில் அனுமதியின்றி வசித்து வந்துள்ளனர்.

"ஐந்து ஆண்டுகளாக அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களுக்கு கைவேலியில் நிரந்தர வீடு உள்ளபோதும் எங்கள் வீட்டை அபகரித்து வசித்து வருகின்றார்கள்" என்றுகுற்றஞ்சாட்டும் அந்தப் பெண், அந்த அலுவலர்கள் இருவரையும் தனது வீட்டிலிருந்து வெளியேற்றுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (து-19)

## மட்டக்களப்பிலும் நேற்று பரீட்சார்த்த வாக்களிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 15



மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான மாதிரி தேர்தல் வாக்களிப்பு, நேற்று மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தின் பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்டச் செயலாளருமான திருமதி.கலாமதி பத்மராஜா, மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சசீலன், மற்றும் அம்பாறை மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், அம்பாறை மாவட்டச் செயலக உயர் அதிகாரிகள் போன்றோரின், நேரடி நெறிப்படுத்தலின் கீழ் இந்த மாதிரித் தேர்தல் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்குரிய பொலிஸ் உயர் அதிகாரிகள், அரச உயர் அதிகாரிகள், உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தனர்.


அப்பகுதியைச் சேர்ந்த 300 பேர் இதன்போது வாக்களிப்பதற்கு அழைக்கப்பட்டிருந்தனர். வாக்காளர்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, சமூக இடைவெளிகளைக் கடைப்பிடித்து சுமுகமான முறையில் வாக்களிப்பில் கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது. (பு-46)

# சர்வதேச கண்காணிப்பாளர்கள் இல்லாமல் பொதுத்தேர்தலா?

## தனிமைப்படுத்தல் விதிகளால் இவ்வாறானதொரு நெருக்கடி

**கொழும்பு, ஜூன் 15**

**இலங்கையின் பொதுத்தேர்தல் ஒகஸ்ட் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அந்தப் பொதுத்தேர்தலில் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.**



கட்டுநாயக்க விமான நிலையத்தின் செயற்பாடுகள் அனைத்தும் எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவித்துள்ளார். அதனடிப்படையில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டிற்குள் பிரவேசிப்பதற்கு ஏதுநிலைகள் காணப்படுகின்றன. இருப்பினும் வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் இராஜதந்திரிகள் உள்ளிட்ட அனைவரும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதோடு தனிமைப்படுத்தல் விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டுமென அரசு அறிவித்துள்ளது.

ஆகவே சர்வதேச கண்காணிப்பாளர்கள் நாட்டுக்குள் வருகை தரும்போது அவர்களுக்குக் கொரோனா சட்ட விலக்களிக்கப்படாதிருக்குமாயின் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதில் சிக்கலான நிலைமைகளே உருவாகும்.

இதேவேளை, இம்முறை தேர்தல் கண்காணிப்பு பணிகளில் பொதுநலவாய அமைப்பு கண்காணிப்பாளர்கள், ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் மற்றும் தென்கொரியாவைச் சேர்ந்த அன்பிறில் அமைப்பினைச் சேர்ந்த கண்காணிப்பாளர்கள் வருகை தருவார்கள் என்ற நம்பிக்கை உள்ளதாக ஆணைக்குழுவின் உறுப்பினர் ரட்ணஜீவன் ஹூல் தெரிவித்துள்ளார்.

இந்த தரப்பினருடன் ஏற்கனவே ஒப்பந்தங்கள் கைச்சாத்தியுள்ள நிலையில் அவர்கள் குறிப்பிட்ட சிலரையாவது அனுப்புவார்கள் என்று கூறிய அவர் அவ்வாறு சர்வதேச கண்காணிப்பாளர்கள் இல்லையென்றால் பெரியளவில் சட்டமீறல்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (ம-44)

## கொரோனா எதிரொலி
# 15,000 பேர் தொழிலிழப்பு

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக தொழிலை இழந்த 15 ஆயிரம் பேரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் மூடப்பட்ட அனைத்து நிறுவனங்களும் அரசின் ஆலோசனைக்கு அமைவாக தற்போது தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

எனினும், சுமார் மூன்று மாதங்கள் மூடப்பட்டிருந்த நிறுவனங்களில் மீளச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது, பெருந்திரளான ஊழியர்கள் தொழிலை இழந்துள்ளனர் என்று தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.ஜே. விமலவீர தெரிவித்தார்.

அவர்களில் சுமார் 15 ஆயிரம் பேரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அனைவரினதும் தொழில் பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான அதிகபட்ச நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கமைவாக தொழில் வழங்குநர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழில் திணைக்களம் ஆகிய தரப்புகள் இணைந்து பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் கலந்துரையாடவேண்டும் எனவும் தொழில் ஆணையாளர் நாயகம் ஏ.ஜே. விமலவீர வலியுறுத்தியுள்ளார். (க)

# மிருகக்காட்சிசாலைகள் மீண்டும் இன்று திறப்பு

கொழும்பு, ஜூன் 15

நாட்டில் உள்ள சகல மிருகக் காட்சிசாலைகளும் இன்று திங்கட்கிழமை முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளன.

சுகாதார அமைச்சின் அறிவுரைகளையும், பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைகளையும் பின்பற்றி மிருகக்காட்சிசாலைகளைத் திறக்கவுள்ளதாக சுற்றுச்சூழல் மற்றும் வன விலங்குகள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சகல மிருகக்காட்சிசாலைகளும் தற்காலிகமாக மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(க)

# மரவள்ளி சேனையில் தந்திரமாக கஞ்சா!

## இருவர் கைது

கொழும்பு, ஜூன் 15

மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டிருந்த சேனையில் மரவள்ளிக் கிழங்கு செடிகளுக்கு இடையில் தந்திரமான முறையில் கஞ்சா செடிகளைப் பயிரிட்ட குற்றச்சாட்டில் இரண்டு பேரை நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்ற விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

நாவலப்பிட்டி, வெலிகம்பள பிரதேசத்தை சேர்ந்த இந்த சந்தேகநபர்கள் கஞ்சா செடிகளை பயிரிட்டு அவற்றின் கிளைகளை விற்பனை செய்து வருவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அதையடுத்து பொலிஸார் அந்த இடத்தைச் சுற்றி வளைத்தனர்.

மரவள்ளிக் கிழங்கு செடிகளுக்கு இடையில் இந்தக் கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டிருந்தன என்று சுற்றிவளைப்பை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர்.

**கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)**

# இடம்பெயர் பொதியில் இடம்பெறும் பொருள்கள்!

கொழும்பு, ஜூன் 15

பருவமழைக்குத் தயாராகும்போது இடர் நேரத்தில் இடம்பெயர்வதற்காக தயார் செய்யப்படும் பொதியில் எவற்றை பொதிசெய்யவேண்டும் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

தண்ணீர் போத்தல்கள், சிறிய டோச் லைட், சுகாதார உபகரணங்கள், சமுர்த்தி முத்திரை அல்லது ஏனைய ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வங்கி கணக்குப் புத்தகம், உலர் உணவுகள், குழந்தைகளுக்கான உணவுகள் என்பன அந்தப் பொதியில் இடம்பெற வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-159)

# கூட்டுத் தொழுகைக்கு அனுமதி

கொழும்பு,ஜூன் 15



வழமையான ஐந்து வேளை மற்றும் ஜூம்ஆ கூட்டுத் தொழுகைகள் உள்ளிட்ட விசேட கூட்டுத் தொழுகைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இலங்கை வக்ப் சபையின் தலைவர் சட்டத்தரணி சப்ரி ஹலீம்தீன் தெரிவித்தார்.

நிகாஹ் (திருமணம்) மஜ்லிஸ் உள்ளிட்ட கூட்டு நிகழ்வுகளையும், தனிநபர் இடைவெளி பேணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், ஏற்கனவே இது தொடர்பில் வக்ப் சபையால் வெளியிடப்பட்ட விதிமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களைப் பேணுவது கட்டாயம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதன் அடிப்படையில் சுமார் 3 மாதங்களின் பின்னர் முஸ்லிம்கள் பள்ளிவாசல்களில் கூட்டாக நிறைவேற்றும் தொழுகைகள் நடைபெறுகின்றன. (கு)

# கொரோனாவால் தாய்மார் பாதிப்பு குழந்தைகளுக்குத் தொற்று இல்லை

கொழும்பு, ஜூன் 15

உலக நாடுகளிடையே பரவிவரும் கொரோனாத் தொற்றால் குழந்தை பிரசவித்த தாய்மார்கள் அதிக அளவு பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பிறந்ததில் அதிக குழந்தைகளுக்கு கொரோனா பாதிப்பு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தொற்று பாதித்த தாய்மார்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுப்பதனால் தொற்று பரவி விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. அதற்கு பதிலளிக்கும் வகையில், உலக சுகாதார அமைப்பு குழந்தைகளுக்குத் தாய்பால் கொடுப்பதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது. அவ்வாறு தாய்ப்பால் கொடுக்கவில்லை என்றால் குழந்தைகளைப் பல வகையான நோய்கள் தாக்குவதற்கான அபாயம் உள்ளது எனத் தெரிவித்துள்ளது. குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொடுக்காமல் வரும் ஆபத்தைவிட தாய்ப்பால் கொடுத்து பரவும் கொரோனா சிறிய ஆபத்துதான். எனவே தொற்றினால் பாதிக்கப்பட்ட தாய்மார்கள் குழந்தைக்கு தாய்ப்பால் கொடுக்கலாம் என்றும் அதற்கான ஊக்கத்தைக் கொடுக்கவேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது. (ப)

பெண்களுடன்

# சேட்டைவிட்டோருக்கு முறையான கவனிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் வீதியால் செல்லும் பெண்களுடன் சேட்டையில் ஈடுபட்ட நான்கு இளைஞர்கள் நையப் புடைக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

கலட்டி வீதியால் செல்லும் பெண் பிள்ளைகளுடன் தொடர்ச்சியாக சேட்டையில் இளைஞர் குழு ஈடுபட்டு வந்துள்ளது. அவர்களின் தொல்லை தாங்காமல் தமது உறவினர்களிடம் பெண் பிள்ளைகள் விடயத்தை தெரியப்படுத்தியுள்ளனர். இதனையடுத்து அவர்களின் உறவினர்களால் சேட்டைவிட்டதாகக் கூறப்படும் இளைஞர்கள் நையப்புடைக்கப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஓ.5.159)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்துக்கான ஒத்திகை நாவாந்துறையில் இடம்பெற்றது.

நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு வாக்களிப்பு ஆரம்பமாகி, மதியம் 12 மணியுடன் நிறைவுக்கு வந்தது.

அந்தப் பாடசாலையை வாக்களிப்பு நிலையமாகக் கொண்ட வாக்காளர்கள் 400 பேருக்கு வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அவர்களில் 238 பேர் வாக்களித்துள்ளனர்.

மதியம் 12 மணியுடன் வாக்களிப்பு நிலையத்துக்கு வருபவர்கள் நிறுத்தப்பட்டனர். 12 மணிக்கு முன்னர் வாக்களிப்பு நிலையத்தை வந்தடைந்தவர்களுக்கு வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே முழுமையான ஏற்பாடுகளுடன் இந்தத் தேர்தல் நடைபெற்றது. சமூக இடைவெளி, முகக் கவசம், கைகளைக் கழுவுதல் போன்ற விடயங்களில் இதன்போது அதிக கவனம் செலுத்தப்பட்டது.

முன்னதாக பரீட்சார்த்த தேர்தலுக்கான தயார்ப்படுத்தல்கள் தொடர்பில், பொலிஸாருக்கான விளக்கங்கள் வழங்கப்பட்டன. அவர்களுடன் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர், கிராம அலுவர்கள், உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஓ.ப)

## ரயில்...

டன் தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டு தகராறில் ஈடுபட்டதாகவும், இருவரும் நிலைய அதிபருக்கு அச்சுறுத்தலும் விடுத்து அங்கிருந்து சென்றதாகவும் ரயில் நிலையப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அவர்கள் இருவரும் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ.5.110)

## கோத்தாவின்...

கிழக்கு மாகாணத்தின் தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் 11 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அண்மையில் உருவாக்கியுள்ளார். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்னவின் தலைமையிலான அந்தச் செயலணியில் பௌத்த மதம் சார்ந்த பிக்குகள், படை அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்குகின்றனர். ஒரு தமிழரோ, ஒரு முஸ்லிமோ இல்லாமல் இந்தச் செயலணியை ஜனாதிபதி உருவாக்கியுள்ளார். இதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் அரசியல்வாதிகளும், வெளிநாட்டு உள்நாட்டு சிவில் அமைப்பினரும் கடும் எதிர்ப்புகளையும் கண்டனங்களையும் தொடர்ச்சியாகத் தெரிவித்து வருகின்றனர்.

இந்தநிலையில், கிழக்கைப் போன்று தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் வடக்கிலும் ஜனாதிபதி விசேட செயலணியை நிறுவ வேண்டும் என்று கிழக்குக்கான ஜனாதிபதி விசேட செயலணியில் அங்கம் வகிக்கும் எல்லாவல மேதானந்த தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கில் நாக விகாரை மற்றும் சில பகுதிகளிலும் தொல்பொருள் இடங்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன எனவும், அநுராதபுரம் தூபாராம விகாரை தொடக்கம் நாக விகாரை வரையில் சகல பகுதிகளையும் பாதுகாத்து நாட்டின் பாரம்பரியத்தைத் தக்கவைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவரின் கருத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச ஆகியோரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

'வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடிக் கண்காணிப்பில் இருக்க வேண்டும். கிழக்கைப் போன்று தொல்பொருள் இடங்களை அடையாளம் காண்பதற்கும் பாதுகாப்பதற்கும் வடக்கிலும் ஜனாதிபதி விசேட செயலணியை நிறுவ வேண்டும் என்ற எல்லாவல மேதானந்த தேரரின் கருத்தை நாம் வரவேற்கின்றோம். வடக்கு, கிழக்கில் சிங்கள பௌத்தர்களின் தொல்பொருள் இடங்கள் பயங்கரவாதிகளின் காலத்தில் திட்டமிட்டு மறைக்கப்பட்டன. சில இடங்கள் அழிக்கப்பட்டன. இவற்றை நாம் அடையாளம் கண்டு பாதுகாக்க வேண்டும். வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் சகல மாகாணங்களும் பௌத்த சிங்களவர்களுக்குச் சொந்தமானவை. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை' என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ஓ.5.22)

## யாழில்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா அறிகுறி போன்று இருமல் உள்ளவர்களிடமிருந்து காசநோய் வேறு பலருக்கு பரவக்கூடிய அபாயம் உள்ளது. காச நோயும் கொரோனா போன்று மக்கள் விழிப்புணர்வுடன் இருந்து கட்டுப்படுத்த வேண்டிய நோயாகும்.

2018ஆம் ஆண்டு 1.2 மில்லியன் மக்கள் காச நோயால் உயிரிழந்துள்ளார்கள். 1.1 மில்லியன் சிறுவர்கள் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். உலகளாவிய ரீதியில் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டுகளில் 10 மில்லியன் மக்கள் காச நோயால் பாதிக்கப்படுவார்கள். இதில் 3 மில்லியன் மக்கள் தாங்கள் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளதை அறியாமலே அந்த நோயுடன் வாழ்வார்கள். ஒரு மில்லியன் மக்கள் எதிர்வரும் ஒரு வருடத்தில் உயிரிழக்க வேண்டி நேரிடலாம்.

யாழ்ப்பாணத்தில் இந்த ஆண்டு 90 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகின்றது. மேலும் 20 காச நோயாளர்கள் இன்னமும் இனங்காணப்படாமல் சமூகத்தில் உள்ளார்கள்.

கொரோனாத் தொற்றுப் பரவலால் மேற்கொள்ளப்பட்டுவரும் சிறப்பு நடவடிக்கைகள் காரணமாக காச நோயாளர்களை இனங்காணவதில் தடை ஏற்பட்டுள்ளது. கொரோனாவால் ஏற்படுத்தப்படும் வறுமையும் காச நோய் பெருக்கத்தை ஏற்படுத்தும்.

இரு வாரமாக தொடர் இருமல், மாலை வேளைகளில் காய்ச்சல், நெஞ்சு நோ, உடல் மெலிவு, உணவில் விருப்பமின்மை, சளியுடன் குருதி வெளியேறுதல் போன்ற அறிகுறி உள்ளவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று சளிப் பரிசோதனை செய்ய வேண்டும். காச நோய்க்கு உள்ளான ஒருவர் 6 மாத தொடர் சிகிச்சை மூலமாக முழுமையாக குணப்படுத்திக் கொள்ளலாம், என்றார். (ஓ.5.20)

## கடும்...

இருந்து சென்றபோது, கடும் காற்றால் கோப்பாய் பாலத்துக்கு அருகில் தூக்கி வீசப்பட்டுள்ளார். இதன்போது கல்லில் அடிபட்டு மயக்கமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இவருடைய இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ஓ.5.26)

## கண்டாவளை...

காப்பாக முன்னெடுக்கப்பட்டன.

வெடிபொருள் அந்த இடத்துக்கு எவ்வாறு கொண்டு வரப்பட்டது? யார் கொண்டு வந்தார்கள்? என்பன தொடர்பில் தீவிர விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வல்வெட்டித்துறையிலும் இராணுவ முகாம் முன்பாக காணப்பட்ட மர்மப் பொதியை எடுக்க முற்பட்டபோது அது வெடித்தமையால் இராணுவ சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகத் தகவல்கள் வெளியானபோதும், இராணுவம் அந்தச் சம்பவத்தை மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5.6)

## ஆர்.பி.ஜி...

இருப்பதை அவதானித்து ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தார்.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இரண்டு ஆர்.பி.ஜி. ரக ஷெல்களையும், ஒரு மோட்டார் ஷெல்லையும் மீட்டனர். (ஓ.5.110)

## வாள்...

செய்துள்ளனர்.

வாள் வெட்டுக்கு தலைவராக இருக்கும் டிலு என்ற பெயருடைய குழுத் தலைவர் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ.5.159)

## 10 வயது...

42 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுமி தினமும் காட்டுப் பகுதிக்கு அருகாமையில் உள்ள வீதியினூடாக செல்வதை தொடர்ந்து அவதானித்த நபர் ஒருவர் வீரபுரம் காட்டுப்பகுதியில் வைத்து சிறுமியை மறித்து பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக்கு அமைவாக அந்தப் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியதன் அடிப்படையில் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

சிறுமி சட்ட மருத்துவப் பரிசோதனைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ.5.18)

## வீட்டுக்குள்...

யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீடொன்றிற்குள் உள்நுழைந்த சிலர் அங்கிருந்தவர்களை வாளால் வெட்டியதுடன், வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களையும் தாக்கி சேதப்படுத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பெண் உட்பட ஐந்து பேர் காயமடைந்த நிலையில் நோயாளர் காவு வண்டி மூலம் வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாரால் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஓ.5.110)

## நீதிமன்ற...

கங்களின் ஒப்புதல் கடிதங்களுடன் கடலட்டை பிடிப்பில் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் படகுகள் ஈடுபட்டுள்ளன.

2018ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் கடலட்டை பிடிப்பில் ஈடுபட்ட 404 படகுகளும், ஆயிரத்து 612 மீனவர்களும் தற்போது மீண்டும் வந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு 2018ஆம் ஆண்டு வழங்கிய அனுமதியால் உள்ளூர் மீனவர்கள் பாதிக்கப்படுவதாகத் தெரிவித்து பெரும் போராட்டம் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டது. அதனையடுத்து அந்த நிறுவனங்கள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தன.

இந்த நிறுவனங்களே தற்போது மீண்டும் வந்து கடலட்டை பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள நிறுவனங்களில் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்குச் சொந்தமான தலா 4 நிறுவனங்களும், சிங்களவர்களுக்குச் சொந்தமான இரண்டு நிறுவனங்களும் உள்ளடங்குகின்றன. (ஓ.5.105)

## விடத்தற்பளையில்...

ஆய்வு கூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்டபோதே தொற்றுக் கண்டறியப்பட்டது. (ஓ.5.159)

## கடலட்டை...

கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் முன்பாக இன்று காலை 10.30 மணிக்கு இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக, வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அழைப்பு விடுத்துள்ளது.

வடமராட்சி கிழக்குக்கு உட்பட்ட 15 சங்கங்களையும் பிரதேச கிராம மட்ட அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், மீனவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசம் அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சி நீதிமன்றால், கடலட்டை பிடிப்பில் பிற மாவட்ட தொழிலாளர் வாடி அமைத்து தங்கியிருந்து தொழில் செய்ய முடியாது என்று உத்தரவு வழங்கப்பட்ட நிலையிலேயே கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைக் கண்டித்தும் அனுமதியை இரத்து செய்யக் கோரியுமே கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (ஓ.5.26)

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரி ஆசிரியை **திருமதி கயலினி உபேந்திரா** அவர்களின் அன்பு மாமனார்.

**நடராஜா பாலஸ்கந்தன்**

அவர்கள் 14.06.2020 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம்**
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**



## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர் சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ்பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்

ஜாதகம், கைரேகை, எண்கணிதம், திருமணத்தடை, கல்வித்தடை, வெளி நாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்புகொள்ளவும்.

**முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368**

**இல.101,** Kandy Road, Jaffna **(யாழ் நீதிமன்றத்திற்கு அருகில்)**


# கொரோனா 1,889

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் கொரோனாவால் மேலும் 5 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்படி கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 1,889 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, தொற்றுக்குள்ளாகியவர்களில் மேலும் 35 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். அதற்கமைய தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,287 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் தற்போது 591 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 11 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே மருத்துவமனைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் 35 பேர் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ,5,22)

## மரண அறிவித்தல்

### நடராஜா பாலஸ்கந்தன்



வியாபாரிமூலை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா பாலஸ்கந்தன் நேற்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகராஜா ராஜலக்ஸ்மி தம்பதியரின் மருமகனும், ரோகினியின் (ஓய்வு பெற்ற பிரதி அதிபர் யாழ் இந்து மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும், சிந்துஜா, கார்த்திக் (பொறியியலாளர், அவுஸ்திரேலியா), உபேந்திரா (முகாமையாளர்- இலங்கை வங்கி, யாழ் பிரதான சாலை கிளை), பானுஜன் (விரிவுரையாளர்-பொறியியல், தொழில்நுட்ப பீடம், யாழ்.பல்கலைக் கழகம்) ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும், குமரேஷ் (பிரதி பொதுமுகாமையாளர் ஸ்ரீலங்கா டெலிகொம்-கொழும்பு), பிரியந்திரி, கயலினி (ஆசிரியை-யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், கோபிஷாந், கிரிஷாந், தஷ்விகா, அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ் சென்றவர்களான தவமணி தேவி, பிறேமாவதி மற்றும் புவனேஸ்வரி, சிவகுமாரி, இளமுருகன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான அமராவதி, ஸ்ரீவரதராஜன் மற்றும் ஐமுனா, சிவானந்தன், கேசவன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2020) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**43/1, குமாரசுவாமி வீதி,**
**கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**021 222 8287**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**



## யாழ்ப்பாணத்தில் உடனடி வேலைவாய்ப்பு

**R.I.B Group (Pvt) Ltd** நிறுவனத்தில் தளபாடங்கள் மற்றும் மின் உபகரணங்கள் விற்பனை பிரிவில் (இலகு தவணைக் கொடுப்பனவு) அனுபவமுள்ளவர்கள் இணைந்து கொள்ளலாம். **(Sales Rep - Male)**

Salary Package 40000/=

- **விற்பனை தொடர்பான அனுபவம்**
- **பேச்சுத்திறன்**
- **வயது - 22-40**

*இது தொடர்பான ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.*

- **நேர்முகத்தேர்வு:- 17.06.2020**
- **நேரம்:- காலை 10.30 - 12.30 வரை**
- **இடம்:- இல.83, காதி அபுபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.**

மேலதிக விபரங்களுக்கு:- 077 388 3879, 021 221 7626


## மரண அறிவித்தல்



### திருமதி மகேந்திரராணி குமாரராஜன்

கருகம்பனை கீரிமலையைப் பிறப்பிடமாகவும் அவுஸ்ரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் தற்போது இணுவிலில் வசித்தவருமாகிய திருமதி மகேந்திரராணி குமாரராஜன் நேற்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் கீதாஞ்சலி (மலேசியா), பக்தவற்சலன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வைத்திலிங்கம் (மலேசியா), உதயமலர் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் மகாஜனாக் கல்லூரி), கதிர்காமவாசன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும் மாலதி (மலேசியா), ஜனானந் (மலேசியா), ஜெகஜோதி (மலேசியா), உமையவேள் (மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் - யாழ். கச்சேரி), தீர்த்தனா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2020) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இணுவிலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாரியப்புல வீதி, இணுவில்.** தகவல்:- **உமையவேள்** (மருமகன்)

**077 248 7780, 077 759 1486**

## மரண அறிவித்தல்

**தோற்றம்**
**21 . 11 . 2007**



**மறைவு**
**24 . 05 . 2020**

### செல்வி சரண்யா குலசிங்கம்

பிரித்தானியா லெஸ்ரர் மாநகரில் வசித்துவரும் திரு.திருமதி குலசிங்கம் தயாளினி தம்பதியரின் செல்வ மகள் சரண்யா குலசிங்கம் விதியின் விளையாட்டுக்கு வினையாகி கடந்த (24.05.2020) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்பு மகள் எருவன் கொடிகாமத்தை வதிவிடமாகக் கொண்டிருந்த காலஞ்சென்ற சுவாமிநாதன் பூரணம் மற்றும் சர்வேந்திரன் பூமலர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற ஞானசீலன் (சீலன்) அவர்களின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கனகசிங்கம் மற்றும் கதிர்காமநாதன் (பிரான்ஸ்) காராளசிங்கம் (இலங்கை) ஆகியோரின் பெறாமகளும், யோகலீலா, சந்திராவதி, சாந்தா, இந்திரயோக நாயகி ஆகியோரின் பாசமிகு மருமகளும், லிபிஷன், அபிநயா, லவண்யா ஆகியோரின் செல்லக் குட்டித் தங்கையும் ஆவார்.

அன்பு மகளின் இறுதிக்கிரியைகள் இன்று (15.06.2020) திங்கட்கிழமை பிப. 1.00 மணியளவில் ASIAN FUNERAL COMPANY 233m MELTON ROAD, LEICESTER LE4, 7AN இல் நடைபெற்று, பின்னர் தகனக்கிரியைக்காக GILROSE CREMATORIUM CROMBY ROAD LEIGESTER LE3 9QU என்ற முகவரிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**குலசிங்கம் (சிவா) - 0044 7466 463817**
**குகன் - 0044 7452 834227**
**அப்பன் - 0044 7552 749100**


**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## Repainting of New Market upper & ground floor buildings in Jaffna Town

Jaffna Municipal Council is expected from interested service providers to apply the enamel paints to the wall, columns and soffit areas of the building complex, completely in free of charge with only the company advertisement in the agreed locations. Before applying the paint, colour combinations should be selected by the Jaffna Municipal Council administration to avoid the unwanted issues. Further, successful bidder should be maintained the painting areas at least 6 months from the time of completion of the work. In these connections, interested bidders are kindly requested to submit their proposal along with the any other offers to JMC through the self-prepared sealed document on or before 29.06.2020. The terms and conditions of JMC are applicable in all steps under these selection processes.

The Chairman,
Procurement Committee,
Jaffna Municipal Council,
Jaffna.
12.06.2020.

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
25 • 05 • 1949

மறைவு
14 • 06 • 2020

## சிவத்திரு நடராஜா பாலஸ்கந்தன்
**(ஓய்வுபெற்ற பதிவாளர், யாழ் மாவட்டச் செயலகம்)**

எமது அன்பு நண்பன் **கார்த்திக்** அவர்களின் ஆருயிர் தந்தை நடராஜா பாலஸ்கந்தன் அவர்கள் நேற்று (14.06.2020) ஞாயிற்றுக்கிழமை காலை சிவபதம் அடைந்து விட்டார்.

மீளாத் துயில் கொண்டு எமை
ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டீர் ஐயா!
கலையாத நினைவுகளோடு
கண்ணீர் உதிர உதிர
பூக்களால் அர்ச்சித்து உம்
ஆத்மா சாந்திடைய எம்
கண்ணீர் துளிகளை
காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் இழப்பினால் வாடித்துடிக்கும் நண்பனின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**மொறட்டுவ பல்கலைக்கழக**
**பொறியியல் பீட நண்பர்கள் - (2002)**

# சீனத் தலைநகரில் மீண்டும் கொரோனா





**பீஜிங், ஜூன் 15**

**சீனாவின் தலைநகர் பீஜிங்கில் கொரோனா இரண்டாவது அலை தற்போது தீவிரமாகப் பரவி வருகின்றது. இதைய டுத்து அந்த நகரின் சில இடங்களுக்கு ஊரடங்கு உத்தரவும், நகர் முழுவதும் அவசர நிலையும் அறிவிக்கப்பட்டுள்ளது**

சீனாதான் கொரோனாவின் பிறப்பிடமாக உள்ளது. அந்த நாட்டின் வுகான் நகரில் தான் கொரோனா முதலில் தோற்றம்பெற் றது.

அதன் பின்னர் அதி துரிதமாக சீனாவின் வேறு சில இடங்களுக்கும் பின்னர் உல கம் முழுவதும் கொரோனா பரவியது. இன்று சுமார் 200 நாடுகள் கொரோனா வால் பாதிக்கப்பட்டுள்ளன.

கொரோனா சீனாவில் தோற்றம்பெற்றா லும் அதிலிருந்து விரைவாக விடுபட்டது சீனா.

கொரோனாவில் இருந்து விடுபட்டுவிட் டோம் என்ற அறிவிப்பை கடந்த மாதத்தில் சீனா விடுத்திருந்தது. இந்த நிலையில் தற்போது அங்கு கொரோனாவின் இரண் டாவது அலை விரைவாகப் பரவி வருகின் றது. பீஜிங் நகரின் மிகப்பெரும் சந்தை யில் இந்த வைரஸ் அவதானிக்கப்பட்டுள் ளது. இதனால் வுகான் அளவுக்குப் பெரும் தொற்று பீஜிங்கிலும் ஏற்படலாம் என்று அஞ்சப்படுகின்றது. (ம)

# அமெரிக்க அதிபரை இனி நம்பமாட்டோம்

## வடகொரியா சாடல்

பியாங்யாங், ஜூன் 15

அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கும், வடகொரிய அதிபர் கிம்முக்கும் இடையே சிங்கப்பூரில் சந்திப்பு நடைபெற்றது. ஆனால் இத னால் ஒரு பயனும் இல்லை என்று சாடிய வடகொரியா, அந்தப் பேச்சு மூலம் இருத ரப்பு உறவில் எந்தவித முன் னேற்றமும் இல்லை என்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வடகொரிய வெளியுறவு துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

சிங்கப்பூரில் நடைபெற்ற ட்ரம்ப்-கிம் சந்திப்புப் போல் இனி நடைபெற வாய்ப் பில்லை. மேலும் அதன் மூலம் இருதரப்பு உறவில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லை. ஆகவே எந்த ஒரு பயனும் இன்றி ட்ரம்பின் வெற்று வாக்குறுதியை நம்பிப் பயனில்லை. அத்தகைய வெற்று வாக்குறுதிக்கான வாய்ப்பை இனி ட்ரம்புக்கு வழங்கப்போவதில்லை.

தாம் ஏதோ அரசியல் சாதனை நிகழ்த்துகிறோம் என்ற பெய ரில் அவர்கள் மேற்கொள்ளும் இத்தகைய சந்திப்புகளை நம் பப் போவதில்லை, ஆகவே இனி அத்தகைய சந்திப்புகள் நிகழாது.

அமெரிக்காவின் அச்சுறுத்தல் களுக்கு எதிராக எங்கள் நாட்டு ராணுவத்தைப் பலப்படுத்து வோம் - என்றார். (ம)



ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவரின் கொலைக்கு நீதி வேண்டி அமெரிக்காவில் பரவலாகப் போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில், அமெரிக்காவைக் கண்டுபிடித்தவரான கொலம் பஸின் சிலைகள் அங்கு அடித்து உடைக்கப்பட்டுள்ளன. (ம)

# இன்னொரு கறுப்பினத்தவர் அமெரிக்காவில் படுகொலை

## தீயாய் பரவுகிறது போராட்டம்

வொஷிங்டன், ஜூன் 15

அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவர் பொலிஸாரால் கொல்லப்பட்டதை அடுத்து எழுந்த போராட் டங்கள் அடங்காத நிலையில் மற்றுமொரு கறுப்பரினத் தைச் சேர்ந்த நபர் பொலிஸாரால் கொல்லப்பட்டுள்ளார். இதையடுத்து நிறவெறிக்கு எதிரான போராட்டம் அங்கு மிகத் தீவிரமாகியுள்ளது.

இதனையடுத்து அட்லாண்டா பொலிஸ் தலைமைப் பதவி யில் உள்ள அதிகாரி எரிகா ஷீல்ட்ஸ் தனது பதவியில் இருந்து விலகியுள்ளார். 27 வயது ரேய்ஷர்ட் புரூக்ஸ் என்ற கறுப்பரினத்தைச் சேர்ந்த நபரைக் கைது செய்யும் போது அவர் பொலிஸாரின் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடினார் என்றும் அதனால்தான் அவர் கொல் லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட புரூக்ஸ் 4 குழந்தைகளுக்கு தந்தை. மகளின் 8ஆவது பிறந்த தினத்தை வெள்ளிக்கிழமை கொண்டாடியுள்ளார். இந்த நிலையில் இவரது கொலை இன்னொரு பெரிய போராட்டத்தை அங்கு உருவாக்கியுள்ளது. (ம)






# மிரட்டலுக்கு நாங்கள் பணியோம் சீனாவுக்கு ஆஸி. பிரதமர் பதிலடி

சீனாவின் மிரட்டல்களுக்கு நாங்கள் ஒருபோதும் பயப்படப்போவதில்லை - என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொறிசன்.

கொரோனாத் தொற்று விவகாரத்தில் சீனா அலட் சியமாகச் செயல்பட்டு தீவிரத்தை மறைத்ததால் இன்றுஉலகம்முழுதும்கொரோனாபலநாடுகளின் பொரு ளாதாரம், சுகாதாரத்தை வெகுவாகப் பாதித்துள்ளது என்று ஆஸ்திரேலியா குற்றம் சாட்டியதோடு இது தொடர்பான அமெரிக்க விசாரணைக்கும் ஆதரவு அளித்து சீனாவை பகைத்துக் கொண்டது.

ஆஸ்திரேலியா - சீனா இடையே ஆண்டுக்கு 55 லட்சம்கோடி அளவுக்கு வர்த்தகம்நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கொரோனா விவகாரத்தில் ஆஸ் திரேலியாவின் நிலைப்பாட்டினால் ஆஸியிலிருந்து மாட்டிறைச்சிக்குத் தடை விதித்தது. பார்லி இறக்கு மதிக்கு அதிக கட்டணம் வசூலித்தது.

மேலும் ஆஸ்திரேலியாவில் இனவெறித் தாக்குதல் நடைபெறுவதால் சீனர்கள் அங்கு செல்ல வேண் டாம் என்றும் சீனா தெரிவித்தது. சீன சுற்றுலாப் பயணிகளும் ஆஸ்திரேலியாவைத் தவிர்க்க வேண் டும் என்று சீனா அறிவுறுத்தியது.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மோரிசனிடம் இது தொடர்பில் செய்தியா ளர்கள் கேட்டபோது அவர் தெரிவித்தா வது:

"நாங்கள் வெளிப்படையாக வர்த்தகம் மேற்கொள்ளும் நாட்டைச் சேர்ந்தவர்கள் எனவே தேவையற்ற மிரட்டல்களுக்கெல் லாம் அடிபணிய மாட்டோம். எங்கள் மதிப்புகளை நாங்கள் விற்கத் தயாராக இல்லை" - என்றார். (ம)

**விஸ்ணுபவன் உயர்தர சைவ உணவகம்**
No.350,K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.
இன்று முதல் (15.06.2020) திங்கள்
இலைக் கஞ்சி
காலை 7.00, மதியம் 12.00 மணிவரை
ஒடியல் கூழ்
முற்பகல் 10.00 - மாலை 3.00 மணிவரை
பெற்றுக்கொள்ளலாம்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.